ஸ்ரீ ராமாநுஜன் - 290



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும்
வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 25	*பரிதாவிஸூ கார்த்திகைமீ 5—12—72ல் வெளியிடப்பட்டது*	*ஸஞ்சிகை 2*

அன்பர்களுக்கு அறிவிப்பு

ஸ்ரீராமாநுஜன் பத்ராதிபர் (P. B. A. ஸ்வாமி) திருவரங்கம் பெரிய கோயிலில் பகற்பத்து மஹோத்ஸவஸேவைக்காக எழுந்தருள்வதால் 5—12—72 தேதி முதல் 14—12—72 தேதிவரை ஸ்வாமிக்கு விலாஸம் C/o Post Master, Srirangam (Trichi-6) *என்பதாம். ஸ்ரீரங்கத்தில் ஸ்வாமி தங்கியிருக்குமிடம்—தெற்கு உத்தர வீதி பாங்கட் தர்மசாலை.*

சென்னையில் திருப்பாவை கோஷ்டி

15—12—72 வெள்ளிக்கிழமை தசமியன்று மாலை தநுர்மாதப்பிறப்பு. அன்றுமுதல் மார்கழி முப்பதும் ஸ்வாமியின் திருப்பாவை யுபந்யாஸம் வழக்கப்படி சென்னையில் உப்பட்டூர் ஆழ்வார்செட்டி சாரிடி ஹாலில் தினந்தோறும் மாலை வேளைகளில் நடைபெறும். சில நாட்களில் மட்டும் காலைவேளையில் நடைபெறும். அது அறிக்கையில் வெளிவரும். ஆக, மார்கழி மாதம் முழுதும் (15—12—72 to *13—1—73) ஸ்வாமிக்கு விலாஸம் கீழ்க்கண்டவாறு—*

Sri P. B: ANNANGARACHARYA,
48, 49, Govindappa Naicken Street,
(Vuppattoor Alwar Chetty Charities) MADRAS-1.

சிறு குறிப்பு :— பலகால் தெரிவித்தும் சந்தாபணமனுப்பாமலும் அதுபற்றி ஒன்றும் தெரிவியாமலுமிருப்பவர்களுக்குப் பத்ரிகை யனுப்புவது நிறுத்தப்பட்டது.

இப்படிக்கு,

தி. அ. அனந்தாழ்வான்,

Manager, Granthamala Office *1—12—1972.*

நம்மாழ்வாரும் நம் கலியனும்

ஆழ்வார்களுள் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய இவ்விருவருக்கும் பல வகைகளில் பொருத்தம் காண்பதனுல் இவ்விருவரையும் சேர்த்து அநுபவிக்கிறோமிங்கு. ''பராங்குச பரகால யதிவராதிகள்'' என்றருளிச்செய்த முன்னோர்களின் திருவுள்ளத்திலும் இப்பொருத்தம் உறைந்திருப்பதேயாம். திருவரங்கம் பெரிய கோயிலில் திருவத்யயனுேத்ஸவத்தில் மற்றையாழ்வார்களிற்காட்டிலும் இவ்விருவர்க்குமுண்டான சேர்த்திச் சிறப்பைக் கட்கூடாகவுங் காண்கிறோம். நம்மாழ்வாரருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழியென்னும் நான்கு திவ்வியப் பிரபந்தங்களானவை அங்கிகளான நான்கு வேதங்களென்றும், திருமங்கையாழ்வாரருளிச்செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்னும் ஆறு திவ்வியப் பிரபந்தங்களானவை ஆறு அங்கங்களென்றும் கொள்ளப்படுவது ஸம்பிரதாயம். அதாவது, வடமொழியில் அங்கிகளான வேதங்கள் ருக், யஜுஸ், ஸாம, அதர்வணமென்று நான்காயும், அவற்றுக்கு அங்கங்கள் சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று ஆறுயுமிருப்பது போலே தென்மொழியிலும் இங்ஙனே கொள்ளப்படுவதாக வுணரத்தக்கது.

மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் திருமங்கையாழ்வார்க்கு இட்டருளின இரண்டு பாசுரங்களில் இரண்டாவது பாசுரம் ''மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங்கூறவவதரித்த—வீறுடைய கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார் வாய்த்த மலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து'' என்பதாம். மாறன்—நம்மாழ்வார்; அவர் பணித்த தமிழ்மறை—திருவிருத்தம் முதலான நான்கு திவ்வியப் பிரபந்தங்கள். மங்கையர்கோன் கூறின ஆறங்கம்—பெரிய திருமொழி முதலான ஆறு திவ்வியப் பிரபந்தங்கள்.

மணவாள மாமுனிகள் இங்ஙனேயருளிச்செய்தது ''வேதசதுஷ்டய—அங்கோபாங்கங்கள் பதினுலும் போலே இந்நாலுக்கும் இருந்தமிழ்நூற் புலவர் பனுவலாறும் மற்றையெண்மர் நன்மாலைகளும்'' (43) என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையை அடியொற்றியேயாம். இங்கே ஒரு சங்கை தோன்றும்; நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்காயும், திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்கள் ஆறுயும் அவதரித்திருப்பதுகொண்டே இப்படி அங்காங்கி பாவம் சொல்லிவிடலாமோ? வடமொழியில் வேதாங்கங்களாகச் சொல்லப்பட்டுள்ள சீக்ஷை, வியாகரணம், சந்தஸ்ஸு, நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பவையாறும் வேதங்களின் பொருளை நிர்ணயிப்பதற்கு இன்றியமையாதனவாயிருப்பதால் அவற்றை அங்கங்களென்னப் பொருத்தமுண்டு. இங்கு அப்படியில்லையே. பெரிய திருமொழி முதலான திருமங்கையாழ்வார் பிரபந்தங்களைக்கொண்டு திருவிருத்தம் முதலான நம்மாழ்வார் பிரபந்தங்களின் பொருளை நிர்ணயிப்பதென்பது கூடுமதன்றே. ஆதலால், நான்கு, ஆறு என்கிற லக்கத்தை மட்டுங்கொண்டு 'அவை அங்கி, இவை அங்கம்' என்று சொல்லிவிடலாமோ?—என்று சங்கிக்க நேரும்.

இதற்குச் சுருக்கமாக வுணர்த்துகின்றோம். வடமொழியிலுள்ள வேதாங்கங்கள் வேதத்திற்கு உபகாரகங்கள் என்று கொள்ளப்படுவதாகத்தானே தேறி நிற்கும். அப்படியே திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்கள் நம்மாழ்வாருடைய பிரபந்தங்களுக்கு உபகாரகங்கள் என்று கொள்ளக் குறையில்லை. ஆயிரத்திற்குமேற்பட்ட பாசுரங்களையருளிச் செய்தவரென்கிற பெருமை நம்மாழ்வார்க்கும் திருமங்கையாழ்வாருக்குமொக்கும். எம்பெருமானை நம்மாழ்வாரநுபவிக்கிற வகைகளும், திருமங்கையாழ்வாரநுபவிக்கிற வகைகளும் பெரும்பாலுமொத்திருக்கின்றன. 1. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினுடைய ஹேயத்தன்மையைப் பேசிக்கொண்டே பிரபந்தம் தொடங்குகை; 2. எம்பெருமான் பக்கலில் அளவுகடந்த ப்ராவண்யத்தைப் பாசுரந்தோறும் வெளியிடுகை; 3. அதில் அர்ச்சாவதாரத்தில் மிக்க அபிநிவேசத்தைக் காட்டுகை; 4. எம்பெருமானோடு கலவியும் பிரிவும் மாறிமாறி வருகை; 5. தம் வாக்காலே பேசுமளவோடு நில்லாமல் பெண்மையெய்தியும் பேசுகை; 6. தூது விடுதல்; 7. இரவில் படும் துயரம் பொறுக்கமுடியாமைகூறல்; 8. எம்பெருமானைத் தம்மை யனுகரித்துப் பேசுதல்; 9. மடலெடுக்கை; 10. இந்திரியங்களுக்கு ஆற்றவொண்ணாது கதறுகை; 11. எம்பெருமானுடைய சுதந்திரத்தை நினைத்து அஞ்சுகை; 12. அடிக்கடி ப்ரபத்தி செய்கை; 13. ஆர்த்தியினுடைய கரை புரட்சி; 14. பிறர் துன்பம் பொறாமல் பலகாலும் ஹிதம் சொல்லுகை...... முதலான பலவும் இவ்வாழ்வார்களிருவர்க்கும் ஒத்திருக்கும். இவற்றையெல்லாம் விரிவாக விளக்கி மகிழ்ந்து மகிழ்விக்க வேண்டியே இஃதெழுதப் புகுந்தபடி.

நம்மாழ்வார் விரிவாக அருளிச்செய்தவற்றைத் திருமங்கையாழ்வார் சுருக்கிப் பேசுவர்; அவர் சுருக்கியருளிச்செய்தவற்றை இவர் விரித்துப்பேசுவர். விபவாவதாரத்திலோ அர்ச்சாவதாரத்திலோ நம்மாழ்வார்கொண்ட அபிநிவேசத்தை இவ்வாழ்வார் மிக்கவுகப்புடனெடுத்துக் காட்டுவரென்னுமிவ்விரண்டு விஷயங்கள் முந்துறமுன்னம் ரஸித்து அநுபவிக்கத் தக்கவை. முன்னம் இதையநுபவிப்போமாக.

நம்மாழ்வார் விஸ்தரித்ததை இவ்வாழ்வார் சுருக்கியது

திருவாய்மொழியில் (ஐந்தாவது பத்து, ஆறுவது பதிகம்) *கடல் ஞாலஞ் செய்தேனும் யானே யென்னும்* என்று தொடங்குவது தாய்ப்பாசுரமாக அமைந்தது; மகள் ஸர்வேச்வரனைத் தன்னையனுகரித்துப் பேசுகிறபடியை வெகு விரிவாகச் சொன்னது. இதைத் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (8-2-6) ஒரே பாசுரத்தினால் சுருக்கினார். *வடவரை நின்றும் வந்து, இன்று கணபுரமிடவகை கொள்வது யாமென்று பேசினாள்* என்கிற பாசுரங் காண்க. அவ்வாழ்வாருடைய அநுகாரம் தாய்ப்பேச்சில் அமைந்தது போலவே இவ்வாழ்வாருடைய அநுகாரமும் தாய்ப்பேச்சில்தான் அமைந்தது. அடுத்தபடி எம்பெருமானுக்குத் தூது விடுவதென்பதை யெடுத்துக்கொள்வோம். இது திருவாய்மொழியில் *அஞ்சிறைய மடநாராய்* *வைகல் பூங்கழிவாய்* *பொன்னுலகாளீரோ* *எங்கானலகங் கழிவாய்* என்னும் நான்கு பதிகங்களில் நாற்பது பாசுரங்களினால் விரிவாக நிகழ்ந்திருக்கிறது. இதனைத் திருமங்கையாழ்வார் மிகச் சுருக்கமாகப் பேசினர். பெரிய திருமொழியில் (3-6) *தூவிரிய மலருழக்கியென்னும் பதிகம் தூது விடுவதாகத் தொடங்கப்பட்டு

நான்கு பாசுரத்தோடு தூதுவிடுதல் நிறுத்தப்பட்டுவிட்டது. மேலேயும் (9-4) *காவார் மடற்பெண்ணை* என்னும் பதிகத்தில் இரண்டு பாசுரங்களில் மட்டுமே தூதுவிடுதல் நிகழ்ந்தது. இனி மற்ருென்று கேண்மின்; சோறு கூறைக்காக நரஸ் துதி பண்ணி ஸ்வரூப நாசமடையும் ஸம்ஸாரிகளை நோக்கி நம்மாழ்வார் (3-9) *சொன்னுல் விரோதமிது* என்னும் பதிகத்தில் வெகு விரிவாக ஹிதங் கூறினர். இவர் (1-1-7) *கண்டவா தொண்டரைப் பாடும் சொற்பொருளாளீர்! சொல்லு கேன்வம்மின் சூழ்புனற் குடந்தையேதொழுமின், நற்பொருள்காண்மின், பாடி நீருய்மின் நாராயணுவென்னும் நாமம்* என்று அதனைச் சுருக்கிப் பேசினர். மேலும் ஆபாஸ பந்துக்களின் ஹேயத் தன்மையைத் திருவாய்மொழியில் (9-1) *கொண்ட பெண்டிர் மக்களுற்ருர்* என்னுமொரு பதிகத்தில் மிக விரிவாகவுரைத்தார் நம் மாழ்வார்; அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (8-9-7) *பெற்ருரும் சுற்றமுமென்றிவை பேணேன் நான், மற்ருரும் பற்றிலேன்* என்று சுருக்கியுரைத் தனர். இன்னமும், ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்துவத்தை நம்மாழ்வார் *உயர் வறவுயர் நலம்* திண்ணன் வீடு *அணைவதரவணை மேல் *ஒன்றுந்தேவும் என்னும் நான்கு பதிகங்களில் மிக விரிவாகவருளிச்செய்தார்; அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (11-6) *மைந்நின்ற கருங்கடல் வாயுலகின்றி* என்கிற ஒரே பதிகத் திஞல் சுருக்கியுரைத்தனர். அவர் விஸ்தரித்ததை இவர் சுருக்குவதென்னுமிதனை மற்றுஞ்சில விஷயங்களிலுங் கண்டு கொள்க.

நம்மாழ்வார் சுருக்கியதை இவ்வாழ்வார் விஸ்தரித்தது

அவர் விஸ்தரித்ததை இவர் ஸங்க்ரஹித்தமை கீழே காட்டினேும். அவர் ஸங்க்ரஹித்ததை இவர் விஸ்தரித்தமை இங்கே காட்டுவோம். நம்மாழ்வார் திரு வாய்மொழியில் (5-3) *மாசறு சோதிப் பதிகத்தில் *குதிரியாய் மடலூர்துமே* என்றும் *யாம் மடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல் தண்ணந் துழாய் மலர் கொண்டு சூடுவோம்* என்றும் இரண்டு துண்டுகளால் மடலூர்தலை ப்ரஸ்தாவித்தார்; மடலூர்தலைப்பற்றி நம்மாழ்வார் திருவாக்கில் வேறு பேச்சு சிறிதும் கிடையாது. இங்ஙனே சுருக்கமாக உள்ளதை இவ்வாழ்வார் சிறிய திரு மடல், பெரிய திருமடல் என்னுமிரண்டு திவ்ய ப்ரபந்தங்களினுல் மிக விவரித் துரைத்தார். அவருடைய இரு சிறுவார்த்தைகளுக்கு இவர் இரண்டு பிரபந்தங்கள் இட்டருளினுராயிற்று. அன்றியும், நாராயண மந்திரத்தின் சிறப்பை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-2-10) *எண் பெருக் கந்நலத் தொண்பொருளீறில, வண் புகழ் நாரணன்* என்றும் (10-5-1) கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்! எண்ணுந் திருநாமம் திண்ணம் நாரணமே* என்றும் இரண்டு சிறு பாசுரங்களிஞ லருளிச்செய்தனர். அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (1-1) *வாடினேன் வாடியென்றும் (6-10) *கிடந்த நம்பி குடந்தை மேவி* யென்றுமிரண்டு பதிகங் களில் "நான் கண்டு கொண்டேன் நாராயணுவென்னும் நாமம்" "நாமஞ் சொல் லில் நமோ நாராயணமே" என்றும் ஒரு காற் சொன்னுப்போலே ஒன்பதின்காற் சொல்லிவைத்தனர். இன்னமும், எம்பெருமான் ஸம்ஸாரி சேதந ஸம்ரக்ஷணுர்த்த மாகப் பல திருவவதாரங்கள் செய்தருளும்படியை நம்மாழ்வார் திருவிருத்தத்தின்

தொடக்கத்தில் *உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தா யிமையோர் தலைவா* என்றும், திருவாய்மொழியில் (5-1-10) *மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய், கானுரேனமுமாய்க் கற்கியாமின்னங்கார் வண்ணனே* என்றும் சுருக்கமாகப் பேசிவைத்தார். அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (8-8) *வானோரளவும் முது முந்நீர், (11-4) *நிலையிடமெங்குமின்றி* என்கிற இரண்டு பெரிய பதிகங்களினால் மிக விரித்துரைத்தார். நம்மாழ்வார் சுருக்கியதை இவ்வாழ்வார் விஸ்தரித்தாரென்னுமிதனை மற்றுஞ் சில விஷயங்களிலுங் கண்டுகொள்க.

விபவ அர்ச்சைகளில் அபிநிவேச விசேஷங்களை யெடுத்துக்காட்டுதல்

மத்ஸ்ய கூர்ம வராஹ ராம க்ருஷ்ணாதியவதாரங்களுக்கு விபவாவதாரமென்று பெயர். இவற்றுள் எந்த அவதாரத்தில் நம்மாழ்வார்க்கு அபிநிவேசாதிசயமென்று ஆராய்ந்து, முதற் பிரபந்தமான திருவிருத்தத்தின் முடிவில் "ஏனத்துருவாயிடந்த—ஞானப் பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே" என்றும், திருவாய்மொழியின் முடிவில் "கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்ட வெந்தாய்" என்றுமருளிச் செய்திருப்பதை ஊன்றி நோக்கின திருமங்கையாழ்வார் வராஹாவதாரமே இவர் மிகவுமீடுபட்டதென்று துணிந்து தமது பெரிய திருமொழியின் தொடக்கத்தில் *பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியானாழியானருளே* என்று அவ்வவதாரந்தன்னையே போற்றினர். இனி அர்ச்சையிற் செல்வோம். கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்யதேச மூர்த்திகளுக்கு அர்ச்சாவதாரமென்று பெயர். இவற்றுள் நம்மாழ்வாருடைய ஈடுபாடு எந்த திவ்ய தேசத்தில் மிக்கதென்று ஆராய்ந்த திருமங்கையாழ்வார் திருக்குடந்தையிலென்று கண்டார். (எங்ஙனேயென்னில்) திருவாய்மொழியின் முடிவில் *சூழ் விசும்பணி முகிற்பதிகம் திருநாட்டிலநுபவத்தைப் பரக்கப் பேசுவது; அங்கு லீலா விபூதியின் நினைவு வருவதற்கு ப்ரஸக்தி கிடையாது. அப்படியிருந்தும் *குடந்தையெங் கோவலன் குடியடியார்க்கு—தொடர்ந்தெங்கும் தோத்திரஞ் சொல்லினர்* என்கிற பாசுரம் மிகவற்புதமாக அவதரித்துள்ளது. அங்குள்ள ஸூரிகள் இவர்களையுபசரிக்கும்போது 'இவர்கள் திருக்குடந்தையெம்பெருமான் திருக்குணங்களிலே ஸந்தானமாக ஈடுபட்டவர்கள்' என்று சொல்லித் தொடர்ந்து தோத்திரஞ் செய்ததாகச் சொல்லிற்று. திருவரங்கம் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான திருப்பதிகள் கிடக்க, அவற்றையெல்லாம் விட்டுத் திருக்குடந்தையிலீடுபாட்டை யெடுத்துரைத்துத் தோத்திரஞ் செய்ததாகவருளிச் செய்ததன் காரணம் ஆராயுமளவில், திவ்யப் பிரபந்தங்களெல்லாம் லோபித்திருந்த காலத்தில் திருக்குடந்தை விஷயமான *ஆராவமுதேயென்கிற பதிகமொன்றுமட்டும் ஸ்ரீமந் நாதமுனிகள் திருச்செவியிலேபட அதிலிருந்தே நாலாயிரமும் புநரவதாரம்செய்ய ப்ராப்தமாயிற்றென்று ஐதிஹ்யமாகையினாலே ஆழ்வார்க்கும் அங்குள்ள ஸூரிகட்கும் பவிஷ்யத் ஜ்ஞானமிருந்தே இப்படிப் பாசுரம் தோன்ற நேர்ந்ததென்பது ரஹஸ்யமருமம். இவ்வாறாக நம்மாழ்வார்க்குத் திருக்குடந்தையிலே அபிநிவேசமிருக்கும்படியை யுணர்ந்தே திருமங்கையாழ்வார் ஸ்வப்ரபந்தாரம்பத்திலேயே (1-1-2) *சூழ்புனற் குடந்தையே தொழுது* என்றும் (1-1-7) *சூழ்புனற் குடந்தையே தொழுமின்*

என்றும் அருளிச்செய்ததன்றியும், சரமப்பிரபந்தமான திருநெடுந்தாண்டகத்தை முடித்தருளும்போதும் ☼தண்குடந்தைக் கிடந்தமாலை நெடியானை யடி நாயேன் நினைந்திட்டேன்☼ என்று நம்மாழ்வாரைப் போலவே திருக்குடந்தை நினைவாகவே முடித்தருளினர்.

அதற்கடுத்த பாசுரத்திலும் ஒரு விசேஷத்தை அற்புதமாகக் காட்டி நின்றார்; (அதாவது) ☼அன்னமாய் முனிவரோடு அமரரேத்த அருமறையை வெளிப்படுத்தவம்மான் தன்னை☼ என்று நம்மாழ்வார்க்குத் திருநாட்டில் திருக்குடந்தை நினைவு வருவதற்குறுப்பான ஐதிஹ்யத்தை முத்ராலங்கார ரீதியில் காட்டி வைத்தார். ஆசார்ய ஹிருதயத்தில் (151) "நாதயாமுனர் போல்வாரை அன்னமென்னும்" என்றருளிச் செய்தபடி அன்னமாயும், நாதமுனிகளென்னும்படி முனிவராயுமுள்ள ஸ்ரீமந் நாதமுனிகளோடே கூட (அமரர் ஏத்த) திருக்குருகூரிலுள்ள நிலத் தேவர்கள் துதிக்க (அருமறையை வெளிப்படுத்த வம்மான்) "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்கிறபடியே அருந்தமிழ் மறையை நம்மாழ்வார் வெளியிட்டருளினபடி காட்டிற்றாயிற்று. பலபல திருப்பதிகட்கு 1, 2, 3, 4, 5, 10 பதிகங்கள் பாடிவருகின்ற திருமங்கையாழ்வார் திருக்குடந்தைக்குத் துணுக்கைப் பாசுரங்கள் தவிர ஒரு பதிகமும் பாடாதொழிந்தது எதனாலேயென்று பலர் விமர்சிப்பதுண்டு. நம்மாழ்வார் பணித்தருளின ☼ஆராவமுதே பதிகத்தை ஆழ்ந்து அநுபவித்தவிவர் 'இதுபோலவோ இதனில் மேம்படவோ நம்மால் பாட இயலாது; ஆகவே இத்தலத்திற்குப் பதிகம் பாடுதலில் நாம் இறங்கத் தகாது' என்றுகொண்டே பதிகம் பாடாதொழிந்தனரென்பது தத்துவம்.

தாமான தன்மையிற் பேசுவதோடு நில்லாமல் பெண்மையெய்தியும் பேசுவதில் ஒற்றுமை

நம்மாழ்வார் குருகூர்ச்சடகோபனென்ற நிலைமையில் நின்று மட்டும் பேசாமல் தலைமகளாக நின்றும் தாயாக நின்றும் தோழியாக நின்றும் பேசுவதைத் திருவிருத்தத்திலும் திருவாய்மொழியிலும் காணா நின்றோம். திருவிருத்தம் நிற்க. திருவாய்மொழியில் தலைமகளாக நின்று பேசின பதிகங்கள் பதினேழு. தாயாக நின்று பேசின பதிகங்கள் ஏழு. தோழியாக நின்று பேசின பதிகங்கள் மூன்று. ஆக இருபத்தேழு பதிகங்கள் வேற்று வாயாலே பேசினவை. மற்ற எழுபத்துமூன்று பதிகங்கள் தாமான தன்மையில் நின்று பேசினவை.

திருவாய்மொழியில் தலைமகள் பாசுரமான பதிகங்களாவன :

1. அஞ்சிறைய மடநாராய்.
2. வாயுந்திரையுகளும்.
3. ஏறாளுமிறையோனும்.
4. மாசறுசோதி
5. ஊரெல்லாந்துஞ்சி.
6. எங்ஙனேயோவன்னைமீர்.
7. மானேய் நோக்குநல்லீர்.
8. வைகல் பூங்கழிவாய்.
9. மின்னிடை மடவார்கள்.
10. பொன்னுலகாளீரோ.
11. வெள்ளைச்சுரிசங்கொடு.
12. ஏழையராவியுண்ணும்.
13. நங்கள் வரிவளை யாயங்காளோ.
14. இன்னுயிர்ச்சேவலும் நீரும்.
15. எங்கானலகங்கழிவாய்.
16. மல்லிகைகமழ் தென்றல்.
17. வேய்மருதோளிணை

ஆக 17.

தாய் பாசுரமான பதிகங்களாவன :

1. ஆடியாடி. 2. பாலனாய். 3. மண்ணையிருந்துதுழாவி
4. கடல் ஞாலம். 5. மாலுக்கு. 6. உண்ணுஞ்சோறு.
7. கங்குலும் பகலும். ஆக. 7.

தோழி பாசுரமான பதிகங்களாவன :

1. தீர்ப்பாரையாமினி 2. துவளில்மாமணிமாடம்.
3. கருமாணிக்கமலை. ஆக. 3.

இவ்வகையில் திருமங்கையாழ்வாரனுபவங்களை இனி யெடுத்துக்காட்டுவோம். பெண்மை யெய்திப் பேசும் பாசுரங்களில் இவ்வாழ்வார்களிருவர்க்கும் பெரும்பாலும் கருத்தொற்றுமை விளங்குமாற்றை உபபாதிக்கக் கேண்மின். மகள் பாசுரமும் தாய் பாசுரமும் தோழிபாசுரமுமானவை திருவாய்மொழியில் 27 பதிகங்களென்று காட்டினோம். திருமங்கையாழ்வார் பாசுரங்களில் தலைவி பாசுரமும் தாயார் பாசுரமுந்தவிரத் தோழி பாசுரமாக ஒரு பதிகமும் அவதரிக்கவில்லை. தலைவி தோழியோடு ஸம்பாஷிப்பதான பாசுரங்களுண்டு; திருவாய்மொழியில் தோழிபாசுரமாகவே மூன்று பதிகங்கள் அவதரித்திருப்பது போல இங்கில்லை யென்பது விவக்ஷிதம். பெரிய திருமொழியிற் பதினோராம்பத்தில் (ஐந்தாவதான) *மானமருமென்னோக்கிப்பதிகம் தோழிமார் பாசுரமன்றோ? என்ன வேண்டா; தோழியரிருவர் தாங்கள் பரஸ்பரம் ஸம்பாஷிக்கும் முகத்தினால் எம்பெருமானுடைய பரத்வ ஸௌலப்யங்களை வெளியிடும் பதிகம் அது. பரகாலநாயகியின் பிரகிருதியைப்பற்றின பேச்சு கிடையாததலால் தோழி பாசுரமன்றென்க. ஆகவே திருமங்கையாழ்வாரருளிச் செயல்களில் (பெண்மையில்) தலைவி பாசுரமும் தாய் பாசுரமுமே உள்ளதென்றதாயிற்று. எனினும், நம்மாழ்வாரருளிச் செயலிற் போல இங்கும் அந்யாபதேசப் பதிகங்கள் இருபத்தேழு தேறியுள்ளன. அவற்றின் விவரணம் வருமாறு;—

பெரியதிருமொழியில் தாய் பாசுரமும் தலைவி பாசுரமுமான பதிகங்கள்

1. திவளும்வெண்மதிபோல்.
2. கள்வன்கொல்யானறியேன்.
3. கவளயானை கொம்பொசித்த.
4. வெருவாதாள்வாய் வெருவி.
5. சிலையிலங்குபொன்னாழி.
6. தெள்ளியீர் தேவர்க்குந்தேவர்.
7. மூவரில் முன்முதல்வன்.
8. புள்ளுருவாகி நள்ளிருள்வந்த (திருநெடுந்தாண்டகத்தில்)
9. பட்டுடுக்கும்பதிகம்.
—தலைவிபாசுரமான பதிகங்கள்.
10. திரிபுரமூன்றெரித்தானும்.
11. தூவிரியமலருழக்கி.
12. தந்தைகாலில் பெருவிலங்கு.
13. கரையெடுத்தசுரிசங்கும்.
14. விண்ணவர்தங்கள்பெருமான்.
15. தந்தைகாலில் விலங்கற.
16. பொன்னிவர்மேனிமரதகத்தின்.
17. தன்னை நைவிக்கிலென்.
18. காவார்மடற்பெண்ணை.
19. தவளவிளம்பிறைதுள்ளு.
20. காதில் கடிப்பிட்டு.
21. திருத்தாய் செம்போத்தே.
22. குன்றமொன்றெடுத்தேந்தி.
23. குன்றமெடுத்துமழைதடுத்து.
24. மன்னிலங்குபாரதத்து.
25. சிறிய திருமடல்.
26. பெரிய திருமடல். (திருநெடுந்தாண்டகத்தில்)
27. மைவண்ண நறுங்குஞ்சிப்பதிகம்.

ஆக 27.

அந்யாபதேசப்பதிகங்கள் நம்மாழ்வாருடையனவும் 27; திருமங்கையாழ்வாருடையனவும் 27 என்று தேறிற்று. இனி இவற்றிலுள்ள ஸாதர்மிய வைதர்மியங்களாகிற வைலக்ஷண்யத்தை யநுபவிப்போம்.

திவளும் வெண்மதிபோல். திருவாய்மொழியில் *கங்குலும் பகலும் போலேயாம் இப்பதிகம். அவருடைய தாய்ப்பேச்சில் அது முடிவுபதிகம், இவருடைய தாய்ப்பேச்சில் இது முதற்பதிகம் என்பது வாசி. பிரமேயம் இரண்டிலுமொன்றே. "இவள் திறத்து என்செய்கின்றாயே" என்று வினவுதல் அங்கு. "நின்தாள் நயந்திருந்த விவளை உன்மனத்தால் என்னினைந்திருந்தாய்?" என்று வினவுதல் இங்கு. இந்த வினா பாட்டுத்தோறு மொக்கும்.

கள்வன் கொல்யானறியேன். திருவாய்மொழியில் *உண்ணுஞ்சோறு பருகுநீர் போலேயாம் இப்பதிகம். தாயை விட்டு மகள் பிரிந்து போதல் இரண்டிலுமொக்கும். திருக்கோளூரை வினவிக்கொண்டு தனியே போனாள் பராங்குச நாயகி; வயலாலி மணவாளன் கொண்டு போகப் போனாள் பரகாலநாயகி.

கவளயானை கொம்பொசித்த. திருவாய்மொழியில் *ஆடியாடியகங்கரைந்து போலேயாம் இப்பதிகம். இசை பாடிப்பாடியுருகுதல் ஒக்கும். *எனவள்ளலே கண்ணனே யென்னுமென்றாள் பராங்குச ஜனனி; *கவளயானை கொம்பொசித்த கண்ணனென்னுமென்கிறாள் பரகாலஜனனி.

வெருவாதாள்வாய் வெருவி. திருவாய்மொழியில் *பாலனாயேழுலகு போலேயாம் இப்பதிகம். அதில் "என்செய்கே னென்னுடைப் பேதையென் கோமளம், என் சொல்லு மென்வசமுமல்லள் நங்கைமீர்" என்றாள் பராங்குசஜனனி; இதில் "தாய் வாயில் சொற்கேளாள் தன்னாயத் தோடணையாள்" இத்யாதியுரைக்கின்றாள் பரகாலஜனனி.

சிலையிலங்கு, தெள்ளியீர்தேவர்க்கும். திருவாய்மொழியில் *கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னு மென்கிற வொரு பதிகம் போன்றது இவ்விரண்டு பதிகமும். அதில் பாட்டுத்தோறும் "ஈசன்வந்தேறக்கொலோ" என்று திருத்தாயார் சொன்னாப்போலே *சிலையிலங்கு பொன்னாழியில் பாட்டுத் தோறும் "கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ!" என்கிறாள் திருத்தாயர். அதில் 'யானே, யானே' என்று எம்பெருமானுடைய தாதாத்ம்யாநுஸந்தானம் பண்ணின படியைத் திருத்தாயார் சொன்னாப் போலவே *தெள்ளியீரில் "வடவரை நின்றும் வந்து இன்று கணபுரமிடவகை கொள்வது யாம் என்று பேசினாள்" என்று தத் தாதாத்ம்யாநுஸந்தானம் பண்ணுகிறபடியை இத்திருத்தாயார் சொல்லுகிறாள்.

மூவரில் முன்முதல்வன். திருவாய்மொழியில் *மண்ணையிருந்து துழாவி போன்றதாமிப்பதிகம்; அதில் "பிரான்கிடக்கும் கடலென்னும்"—இதில் "முழங்கார் கடலுள் கிடந்து." அதில் "எல்லாவுலகு கண்ணன் படைப்பென்னும்" — இதில் "பூவலருந்தி தன்னுள் புவனம் படைத்து," "மூவுலகும் படைத்த முதல் மூர்த்தி தன்னை" இங்ஙனே கண்டு கொள்க. இனி* புள்ளுருவாகி நள்ளிருள் பதிகத்திலும், (திருநெடுந்தாண்டகத்தில்) *பட்டுடுக்கும் பதிகத்திலும் பராங்குச ஜனனியின் பேச்சுக்களின் ப்ரபஞ்சனப்ரணாளிகள் உய்த்துணரத்தக்கது. திருவிருத்தத்தில்

அருளார் திருச்சக்கரத்தாலென்னும் தாய்பாசுரத்தில் "ஈங்கோர் பெண்பால் பொருளோ வெனுமிகழ்வோ?" என்ற வார்த்தையே *புள்ளுருவாகியில் ஒன்பது பழமொழிகளால் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அங்கு அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையுரையில் விளக்கம் காண்க.

பட்டுடுக்கும் பதிகத்திலிருந்து கண்டதோர் விசேஷார்த்தம்—திருநெடுந்தாண்டகத்தில் *பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவைபேணுள்* என்கிற பதினோராம் பாட்டு முதலாக "தேராளும் வாளரக்கன் செல்வம் மாள" என்கிற இருபதாம் பாட்டு வரையில் தாய்பாசுரமான பதிகம். இதில் *பட்டுடுக்கும் பாசுரத்தில் "மட்டுவிக்கி மணிவண்டு முரலுங்கூந்தல்" என்று பரகால நாயகி குறிக்கப் படுகிருள். இதிலிருந்து நாமைகதேச க்ரஹணந்யாயத்தாலே பரகால நாயகிக்கு மணிவண்டு என்றொரு திருநாமம் ப்ரஸித்தமாகிறது. இதை நெஞ்சில் திடமாக வைத்துக்கொண்டு மேல் விஷயம் குறிக்கொள்க. பெரிய திருமொழியில் (6-6) *அம்பரமும் பெருநிலமென்று தொடங்கும் திருநறையூர்ப் பதிக மொன்றில் "வம்பவிழுஞ் செண்பகத்தின் வாச முண்டு மணிவண்டு வகுளத்தின் மலர் மேல் வைகு" என்றுள்ளது. மணிவண்டானது முந்துற முன்னம் செண்பகப்பூவை அநுபவித்து விட்டுப் பிறகு மகிழ மலரிலேயே படுகாடு கிடப்பதாக இங்குச் சொல்லப்படுகிறது. "யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோத: வகுலாமோத வாஸிதம்" [யதிராஜஸப்ததி] என்றதற்குச் சேர திருவாய்மொழியநுபவத்தில் ஊன்றியிருப்பதுதான் வகுளத்தின் மலர் மேல் வைகுதலாகச் சொல்லிற்றிங்கு. ஆழ்வார்கள் திரளில் திருமங்கையாழ்வார் கடைக் குட்டியாகையாலே மற்றுள்ளவாழ்வார்களனைவருடையவும் திவ்வியப் பிரபந்தங்களை இவர்தாம் அநுபவித்தவர். அதனைச் *செண்பகத்தின் வாச முண்டென்பதனுல் காட்டி, அவை யெல்லாவற்றினுள்ளும் நம்மாழ்வாரருளிச்செயலிலேயே தாம் ஊன்றியிருந்தபடியை *வகுளத்தின் மலர்மேல்வைகு* என்பதனுல் விளக்கினபடி. இங்குத் திருமங்கையாழ்வாராகிய தம்மையே மணிவண்டென்பதனுல் குறித்தனரென்பது உறுதி. இதை முன்னடியே நம்மாழ்வார் தெரிந்து கொண்டவராதலால் திருவிருத்தத்தில் "வண்டுகளோ! வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ உண்டு களித்துழல்வீர்க்கு ஒன்றுரைக்கியம், ஏனமொன்ருய் மண்துகளாடி வைகுந்த மன்னுள் குழல்வாய் விரை போல் விண்டு கள்வாரும் மலருளவோ நும்வியலிடத்தே." என்றருளிச் செய்தார். இங்கு "வண்டுகளோ! வம்மின்" என்றது திருமங்கையாழ்வாரையே விளித்தபடி. விளித்து என்ன வினவுகிருர்? நீர் எவ்வளவோ ஸ்ரீஸூக்திகளையுண்டு களித்துத் திருப்பதிகள் தோறும் உழல்கின்றீரே, திருவாய்மொழி போன்றது பரம போக்யமானதொரு பிரபந்தம் கடல் சூழ்ந்த மண்ணுலகில் எங்கேனுங் கண்டதுண்டோ? என வினவுகிறபடி. அந்த வினவுக்கே இவர் விடையிறுக்கிருர்—'ஸ்வாமிந்! கண்டதில்லை; ஆனது பற்றியே வகுளத்தின் மலர்மேல் தானே வைகிக்கிடக்கிறே' னென்று.........ஆக இதுவரையில் தாய் பாசுரமான பதிகங்களின் ரஸாநுபவம் பண்ணினேம்: இனி தலைவி பாசுரமான பதிகங்களின் ரஸாநுபவம் பண்ண ப்ராப்தமாகிறது. இது மிக விரிவாகச் செய்ய வேண்டும்; தற்காலம் ஸம்க்ஷேப ருசியால் "ரஸிகர்களுகக்கும் விசேஷப் பொருத்தங்கள்" என மகுட

மிட்டு அம்மகுடத்திற்கு இணங்கிய இருபது விஷயங்களை நிரூபிப்பதனுல் க்ருத க்ருத்யனுகிறேன். பதிகங்களின் மீது விரித்துரைப்பது மற்றொரு காலாகும்.

ரஸிகர்கள் உகக்கும் விசேஷப் பொருத்தங்கள்:—(1) வேதத்தில் (தைத்திரீய யஜுர் ப்ராஹ்மணத்தில்) "க்ருத்திகா: ப்ரதமம். விசாகே உத்தமம்" என்று ஓதப்பட்டுள்ளது. திருமங்கையாழ்வாருடைய நக்ஷத்ரமான க்ருத்திகையும், நம்மாழ்வாருடைய நக்ஷத்ரமான விசாகமும் விசேஷித்தோதப்பட்டன. (2) எதிரிகளின் செருக்கையடக் குந்திறத்தில் பராங்குசனென்கிற திருநாமமும் பரகாலனென்கிற திருநாமமும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. (3) அடியார்களையுகப்பிக்கும் விஷயத்தில் ஒருவர் இன்பமாரி யென்றும், மற்றொருவர் அருள்மாரியென்றும் பேர்பெற்றனர். திருவாய்மொழியில் (4-5-10) *வண்டமிழ்நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே* என்று நம் மாழ்வார் தம்மை இன்பமாரியாகத் தெரிவித்தார்; பெரிய திருமொழியில் (3-4-10) *அங்கமலத்தடவயல் சூழாலிநாடன் அருள்மாரியரட்டமுக்கி அடையார்சீயம்* என்று திருமங்கையாழ்வார் தம்மை அருள்மாரியாகத் தெரிவித்தார். முறையே ஆனந்தவர்ஷுகர், கருணுவர்ஷுகர் என்று பொருள். (4) திருவிண்ணகர்த் திருப் பதி யெம்பெருமானை உப்பிலியப்பனென்று வழங்குவதைத் தவிர்க்க நம்மாழ்வார் (6-3-9) *தன்னெப்பாரில்லப்பன்* என்முர். திருமங்கையாழ்வார் (8-1-2) *ஒரு வரையும் நின்னொப்பாரொப்பிலாவென்னப்பா* என்று அதற்குச் சேமக்காப்பு சாற்றினுர். (5) நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-4-8) *திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்* என்று பகவத் பக்தர்களான அரசர் களை மதித்துப்பேசினுர்; அதை யடியொற்றியே திருமங்கையாழ்வார் பெரிய திரு மொழியில் "தென்னன் தொண்டையர்கோன்—மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண் முடிமாலை வயிரமேகன்—பல்லவன் வில்லவனென்றுலகில் பலராய் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன்—துளங்கு நீண் முடியரசர் தங்குரிசில் தொண்டைமன்னவன் திண்டிறலொருவன்—செம்பியன்கோச் செங்கணுன் சேர்ந்த கோயில்—இருக்கிலங்கு திருமொழிவாயெண்டோளீசற்கு எழில் மாடமெழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்றிப்படி பகவத் பக்தர்களான சில சக்ரவர்த்திகளைச் சிறப்பித்துக் கூறினர்.

(6) கண்ணபிரான் திருவாய்ப் பாடியில் *படலடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்குப் பசுவெண்ணெய் களவு காணப்புகுமிடத்தில் தன்னிறத்தினிருட்சி யாலும் அவ்விடத்தினிருட்சியாலும் வெண்ணெயிருக்குமிடம் தெரியாமல் தடவா நிற்கையில் யாத்ருச்சிகமாகக் கையிலே வெண்ணெய்த்தாழி தட்டின உவப்பினுல் பல்லைத் திறந்து சிரிக்க நேரும்; பூரண சந்திரனுடைய கிரணம்போலே திருமுத்துக் களின் ஒளி புறப்படவே அந்த வொளியையே கைவிளக்காகக் கொண்டு வெண் ணெயை வாரி விழுங்குவனும் கண்ணன். இதை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3-8-3) "நாளிளந்திங்களைக் கோள்விடுத்து வேயகம் பால் வெண்ணெய் தொடு வுண்ட ஆனுயர்தாயவனே!" என்ற பாசுரத்தினுல் அநுஸந்தித்தார். இதைத் திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் (2-10-6) "உறியார்ந்த நறு வெண்ணெயொளியால் சென்று அங்குண்டானை" என்றநுஸந்தித்தார். இங்கு 'ஒளி யால்' என்றது திருமுத்துக்களினொளியால் என்றபடி. இரண்டிடத்திலும் அடியே

னுடைய திவ்யார்த்த தீபிகை நோக்கத் தக்கது. (7) திருவாய்மொழியில் (4-6) *தீர்ப்பாரையாமினியில் கட்டுவிச்சி வருகிருள்; அவள் தேவதாந்தரக் கட்டுவிச்சியா கையாலே இகழப்பட்டாள்; சிறிய திருமடலிலும் திருநெடுந்தாண்டகத்திலும் வருகிற கட்டுவிச்சி பகவத் ப்ரவணையாகையாலே புகழப்பட்டாள். (8) நம்மாழ் வார் திருவிருத்தத்தில் ''முலையோ முழுமுற்றும் போந்தில, மொய்பூங்குழல் குறிய, கலையோ வரையில்லை நாவோகுழறும்'' என்று பருவத்துக்கு ஏலாத தன்மையைச் சொன்னுர். இவரும் ''முள்ளெயிறேய்ந்தில கூழை முடிகொடா, தெள்ளிய ளென்ப தோர் தேசிலளென்செய்கேன்'' என்றுர். (9) நம்மாழ்வார் *பயிலும் சுடரொளி யிலும் *நெடுமாற்கடிமையிலும் பாகவத சேஷத்வத்தைப்பேசினுர். இவரும் *நண்ணுத வாளவுணரிலும் *கண்சோர வெங்குருதியிலும் அதனைப்பேசினுர். (10) நம்மாழ்வார் *ஊரெல்லாந்துஞ்சியிலே இராப்பொழுதில் தனிமைக்கு வருந் தினுர். இவர் *தந்தை காலில் விலங்கற வென்னும் திருக்கண்ணபுரப் பதிகத்தில் அதனினும் மிக வருந்தினுர்.

(11) நம்மாழ்வார் *ஒரு நாயகத்தில் ஐச்வரியத்தின் அல்பாஸ்திரத்வங் களை விரிவாகப் பேசினுர். இவர் (6-2-5)* பாண்டேன் வண்டறையுங்குழலார்கள் பல்லாண்டிசைப்ப, ஆண்டார் வையமெல்லாம் அரசாகி முன்னுண்டவரே மாண்டா ரென்றுவந்தார் அந்தோ!* என்று அதைச் சுருக்கமாகப்பேசினுர். (12) நம்மாழ் வார் *குரவை யாய்ச்சியரோடு கோத்ததுமென்றபதிகத்தில் க்ருஷ்ணுவதாரசரிதை களை விரிவாகப்பேசினுர். இவரும் அதை *மானமுடைத்துங்களாயர் குலமென்னும் பதிகத்தில் மிக விரித்துரைத்தார். (13) நம்மாழ்வார் *இன்னுயிர்ச் சேவலும் பதிகத்தில் ''என்னுயிர்க் கண்ணபிரானை நீர்வரக்கூவகிலீர்'' என்று இன்னுப்போடே பேசினுர்; இவர் *திருத்தாய் செம்போத்திலே வெறுப்பின்றிக்கே அநுநயமாகப் பேசினுர். (14) நம்மாழ்வார் *மின்னிடைமடவாரில் ஊடல் ரஸமநுபவித்தார். இவர் *காதில் கடிப்பிட்டிலே அதே ரஸத்தையநுபவித்தார். (15) நம்மாழ்வார் *உண்ணிலாவிய வைவரால் பதிகத்திலே இந்திரியங்களுக்கு ஆற்ற வொண்ணுமல் ஓலமிட்டார். இவர் *திருவுக்குந் திருவாகிய பதிகத்திலே அங்ஙனே ஓலமிட்டார். (16) நம்மாழ்வார் *ஆழியெழப்பதிகத்தில் பல அபதானங்களைப் பேசினுர். இவர் *ஏழையேதலனில் அப்படியே. (17)நம்மாழ்வார் ''கடியன் கொடியன் நெடியமால்... ஆகிலுங்கொடிய வென்னெஞ்சமவனென்றே கிடக்குமெல்லே'' என்று குணக்ருத தாஸ்யமன்றிக்கே ஸ்வரூபப்ரயுக்தமான அடிமையை யநுஸந்தித்தார். இவரும் ''வேம்பின்புழு வேம்பன்றியுண்ணுது, அடியேன் நான்பின்னுமுன் சேவடியன்றி நயவேன்'' என்று அதனை விவரித்தார். (18) நம்மாழ்வார் திருவிருத்தத்தில் *சூட்டு நன்மாலைகள் பாசுரத்தில் கண்ணன் வெண்ணெய் தொடுவுண்பதற்காகவே திருவாய்ப்பாடிக்குப் போந்ததாக அருளிச்செய்தார். இவரும் ''காணுயன்கடிமனை யில் தயிருண்டு நெய்பருக நந்தன் பெற்றவானுயன்'' என்றுர். (19) நம்மாழ்வார் எத்திற முரலினேடிணைந் திருந்தேங்கிய வெளிவே'' என்று ஒருகால் சொல்லித் தரைப்பட்டார். இவர் ''அவன் காண்மினின்ருய்ச்சியரால் அளைவெண்ணெயுண் டாப் புண்டிருந்தவனே'' என்று ஒருகால் சொன்னுப்போலே ஒன்பதின்கால் சொல் லித் தரைப்பட்டவர். இங்ஙனே யெடுத்துக்காட்டியநுபவிக்க வேண்டியவை அபரிமிதம்.

(20) திருவாய்மொழிக்கும் பெரிய திருமொழிக்கும் மிகச்சிறந்த தனியன் அமைந்தது. ''பக்தாம்ருதம் விச்வஜநாநு மோதனம்'' ''நெஞ்சுக்கிருள்கடிதீபம்''— இவ்விரண்டு தனியன்களிலும் ஆச்சரியமான ஐந்து விசேஷங்கள் தேனிலுமினியவை. ''சீரார்சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெறவும்,'' *பொங்கு புகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரமனைத்தும் தங்குமனம் பெறவும் இராமா நுசமுனியை வணங்கி வேண்டுதல் இவ்விருவர் அருளிச்செயலுக்கே ஒக்கும்.

அழகிய மணவாளனும் மணவாளமாமுனியும்

(தி. அ. அநந்தாழ்வான்)

கச்சிநகரில் வரந்தருமாமணிவண்ணன் ஸன்னிதியில் கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் வரவரமுனிகளுத்ஸவம் 1—11—72 தொடங்கி 10—11—72 வரை சிறப்புடன் நடந்தேறியது. இரவு வேளைகளில் நம் ஸ்வாமியின் உபந்யாஸம் செவிக்கமுதமாய் நிறைந்து நினைதொறும் இன்பம் பயக்குமதாய் இருந்தது. விடா யாற்றி சாற்றுமுறையன்று (18—11—72) ஸ்வாமி அருளிய உபந்யாஸம் அரங்கனுக் கும் அரவரசுக்குமுள்ள ஐக்கியத்தைப் பற்றியதாய் அற்புதமென்ன வமைந்தது. அதனைத் தழுவியே இக்கட்டுரை வரையப்படுகின்றது.

பொய்யிலாமுனி தன் அடியிணை பணியும் பரவாதி பீகரர் தாம் பணித்த வரவரமுனிசதகத்தில் கெண்டையுங் குறளும் முதலான பத்தராவிதன் பத்திுய தோற்றத்தோடு ஸௌம்யோபயந்த்ரு முனிகட்குள்ள ஸாம்யத்தை அருளிச்செய்த பின் அர்ச்சாவதார ஸாம்யத்தை அநுபவிக்கின்றூர். அவற்றுள் ''அஹீநபோக ப்ரவணஸ்ஸமிந்தே ஸ்ரீரங்கதாமா கில ரங்கபர்த்து:, ஸாதர்ம்யமாஸாத்ய யதங்க்ரி பக்த: பாயாத்ஸந: ஸௌம்யவரோ முநீந்த்ர:'' (36) என்னும் ச்லோகம் அணியரங்க னுக்கும் மணவாளமாமுனிகட்குமுள்ள ஸாம்யத்தை உணர்த்துமதாகும். இனி நம் ஸ்வாமி அரங்கனுக்கும் அரவரசுக்கும் உள்ள ஒருமைப்பாட்டினைக் காட்டியவாற் றைத் தெரிவிக்கின்றோம்.

''வண்டினமுரலுஞ்சோலை'' என்னும் திருமாலைப் பாசுரத்தில் வண்டும் கொண்டலும் மயிலும் குயிலும் இடம் பெற்றுள்ளன. இவை இவ்விருவரையும் குறிப்பனவாய்த் திகழ்கின்றன. ''வண்டினமுரலுஞ்சோலை''-எம்பெருமானை வண்டா கக் கொண்டனர் தண்டமிழ் மாறன். ''தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு'' என்பது அவர்தம் திருவாக்கு. வண்டானது மலரிற்பொருந்தி ஸாரத்தைக் கிரகித் தற்போன்று எம்பெருமானும் ஆழ்வார்தம் நளினமன்ன நெஞ்சிற் கிடந்த ஸக லார்த்தங்களையும் கிரகித்தனன். மலர்கள் வண்டின் வரவெதிர்பார்த்து வாசனை திசைதொறும் வீசிநிற்கும். அதுவே போன்று ஆழ்வாரும் ஆர்வுற்றிருக்க அவரின் முன்னம் பாரித்துத் தான் அவரை முற்றப்பருகினனன்றே எம்பெருமான்! வண்டு கள் ஆறுகால்களைப் பெற்றுள்ளமையின் ஷட்பதம் எனப்படுவன. எம்பெருமானும் அரும்பண்புகள் ஆறு [ஞானம் முதலியன] நிரம்பப்பெற்றவன் [பகவச் சப்த வாச்ய னுகையாலே]. காதலால் மறை நான்கு முன்னோதியபட்டனும் வண்திருவரங்கனை

வண்டாகப் பட்டரும் உருவகிப்பர். "லக்ஷ்மீ கல்பலதோத்துங்க ஸ்தந ஸ்தபக சஞ்சல:, ஸ்ரீரங்கராஜ ப்ருங்கோ மே ரமதாம் மாநஸாம்புஜே." (ஸ்ரீரங்கராஜஸ்தவம். பூர்வசதகம்—10) "திருமாமகளாகிற கற்பகவல்லியின் வாராளுமிளங்கொங்கையாம் பூங்கொத்திற் சுழலுமதான அணியரங்கனென்னும் மணிவண்டு அடியேனுடை நெஞ்சென்னும் கமலத்துஅமர்ந்து களித்திடுக" என்பது இதன் கருத்து.

இனி மாமுனிகளை வண்டாகக் கொள்வதன் பொருத்தத்தைக் காண்போம். வண்டுக்கு வடமொழியில் த்விரேப: என்றொரு பெயருண்டு. இரண்டு ரேபங்களை ('ர' என்னும் எழுத்து) உடையது என்பது இதன் பொருள். வண்டைக் குறிப்பிடும் ப்ரமர: என்னும் சொல்லில் ரேபமிரண்டுமுளதன்றே. மாமுனிகளும் இவ்வகையான் த்விரேப: என்னத்தக்கவரென்க. என்னை? வரவரமுனி என்னும் ஸ்வாமி திருநாமத்தில் இது காணலாம். மேலும் இவரடி பணிந்த நல்லாசிரியர்களும் பல விடங்களில் இவரை வண்டென்று கொண்டாடியுள்ளனர். "ராமாநுஜார்ய சரணம் புஜ சஞ்சரீகம்" (1), 'மஹதாஹ்வயபாதபத்மயோர் மஹதுத்தம்ஸிதயோர் மதுவ்ரதம்' (43), "சடாராதி ஸ்ரீமத் வதந ஸரஸீஜாத மிஹிரஸ்ததீய ஸ்ரீபாதாம்புஜமதுகர:" (53), "யதீந்த்ரபதபங்கஜ ப்ருங்கவரம்" (85) என்று ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா வரவரமுனிசதகத்தில் போற்றியுள்ளனர். ஆழ்வார் புட்பாகனிடம் தூதுநல்கி விடும் புள்ளினங்கட்கு ஸ்வாபதேசம் அருளிச் செய்கையில் "என் பெறுதி என்ன ப்ரமியாது" என்கிற சூர்ணையில் வண்டுக்கு ஸ்வாபதேசம் உணர்த்துவர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். "குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்து" என்பதும் இதே சூர்ணையில் காணப்படுவதாம். வண்டுகள் வகுளம் முதலிய மலர்களின் ஸாரமாம் தேனைப்பருகுதல் இயல்பே. அதுபோன்று மாமுனிகளும் வகுளாபரணரான நம்மாழ்வார் தம் சொன்மாலையின ஸாரத்தைக் கிரகித்தவர் ஆவர். திருவாய்மொழியின் ஸாரமாகத் தணவா நூற்றந்தாதி அருளிச்செய்தமையின் இஃது இனிதுணரப்படும். "வகுளமாலிநிபத்தபாவம்" (வரவரமுனிசதகம் 51) என்று கொண்டாட நின்றவர் மாமுனிகள். ["மன்னியசீர் மாறன்கலை உணவாகப் பெற்றோம்" என்றருளிச்செய்தனர் மாமுனிகளும்).

"மயிலினமாலுஞ்சோலை"—அரங்கமேயமாயனைத் தோகைமா மயிலாக உருவகித்தனர் கருவிலே திருவுடைய பட்டர்.

> "ப்ரலய ஸமயஸுப்தம் ஸ்வம் சரீரைகதேசம் வரத! சிதசிதாக்யம் ஸ்வேச்சயா விஸ்த்ருணுந:, கசிதமிவ கலாபம் சித்ரமாதத்ய தூந்வந் அநு சிகிநி சிகீவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்."(ஸ்ரீரங்கராஜஸ்தவம். உத்தரசதகம் 44)

"பேரருளாள! "தோகைவிரிக்கின்ற பொறியார் மஞ்ஞை பேடைமயில் முன் அணிமாநடம் பயின்றாடுவதுபோன்று, ஊழிக்காலத்து உறக்கங்கொண்டவை போல் நின் திருவுடம்பில் ஒரு கூறாய் ஒன்றிநின்ற திரிவனவும் நிற்பனவுமாமவற்றை மழுங்காத ஞானத்தினால் பல்வகைப் பெருவிறலுலகமாய்ப் பரப்பித் திருமடந்தை முன்பே நீ விளையாடுதி" என்றவிதில் எம்பெருமான் மயிலாகக் கொள்ளப்பட்டது அறிந்தின்புறற்பாற்று.

இனி மாமுனிகள் விஷயமாக நோக்குவாம். மயில் தன் உடலில் அடங்கிய அழகிய கலாபத்தை விரிப்பதுபோன்று மாமுனிகளும் தமது திருவுள்ளத்திற்கிடந்த கலைகளை (வியாக்கியானமருளும் போது) விரித்துச் சிறந்தனர். "வ்யாக்ய்யா கர்ப்பம் வரவரமுநே த்வந்முகம்" (வரவரமுனிசதகம்—46) என்று எறும்பியப்பாவும் "ஹ்ருத்யா யஸ்ய ஸரஸ்வதீ ஸுவிமலா" (வரவரமுனிசதகம்—17) என்று பரவாதி பிகரரும் அருளிச்செய்தமை நோக்கத்தக்கது. "ரஹஸ்யத்ரயாக்ய்யம் ஐகத்தேசிகோக்தம் ரஹஸ்யத்ரயாந்தர்கதார்த்த ப்ரதீபம், விவவ்ரே ஐகத்குப்தயே ய: க்ருபாப்தி: ஸ ந: பாது ரம்யோபயந்தா முநீந்த்ர:" (வரவரமுனிசதகம் 73) என்னும் ச்லோகரத்னமும் காணவுரியதாம். மயில்கள் ஆலித்தலைழைத்தற்போன்று மாமுனிகளும் முகில்வண்ணனைக் கண்ணுரக் கண்டுகொண்டு ஆட்டமேவி அலந்தழைத்தயர் வெய்திய மெய்யடியாராவர்.

"கொண்டல்மீதணவுஞ்சோலை"—கண்டவர் சிந்தை கவரும் கடிபொழில் தென்னரங்கனைக் கொண்டல் என்பர் நம்பெருமாள்குமாரர்.

"ஸிஞ்சேதிமம் ச ஜநமிந்திரயா தடித்வாந்
பூஷாமணித்யுதிபிரிந்த்ர தநுர்ததாந:,
ஸ்ரீரங்கதாமநி தயாரஸ நிர்பரத்வாத்
அத்ரௌ சயாலுரிவ சீதல காளமேக:."

(ஸ்ரீரங்கராஜஸ்தவம். பூர்வசதகம் 82)

"பூமன்னுமாதெனும் மின்னிற்பொலிவதாய், இழை பலவற்றில் பதித்த பன்மணிகளினொளியாகிற ககனவில்லொன்று ஏந்தியதாய், நல்லருள் எனும் நீர் நிரம்பப்பெற்றமையான் திருவரங்கப்பெருநகருள் வரைமேல் (அனந்தனென்னும் அணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவிப்) பள்ளிகொள்வதான, குளிர்ந்துறைகின்ற கார்முகில் அடியேனையும் நனைத்தருள்க" என்பது இதன் கருத்தாம்.

"குணவாள பட்டரிருகோகனகத்தாள்சேர் மணவாளதாச"ரான ஐயங்காரும் இதனை அடியொற்றியே" காவிரிவாய்ப் பாம்பணைமேல் கருமுகில்போற் கண்வளரும் கருணை வள்ளல்" (திருவரங்கக் கலம்பகம் 100) என்றருளிச் செய்தனர். இனி, "தம் ப்ரபந்நஜந சாதகாம்புதம்" என்று மாமுனிகளையும் முகிலெனவே போற்றினர் பெரியோர். கைம்மாறு கருதாது மழைபொழிந்து உலகினை உய்விக்கும் முகிலே வண்மையிற் சிறந்ததென்று செப்புவர் சான்றோர். மாமுனிகளும் கொண்டலனைய வண்மையினர் என்பதனை "தஸ்மை நித்யம் நம ஸ்ஸ்யாத் வரவரமுநயே நிஸ்துலோதார பூம்நே" [வரவரமுனி சதகம்—77] என்பதின் இனிதுணரலாம்.

"குயிலினங்கூவுஞ்சோலை"—கயல்துளு காவிரிசூழ் அரங்கனைக் குயில் என்றது நிறவொற்றுமையொன்றினாலன்று. குயிலுக்கு வடமொழியில் "வநப்ரிய:" என்றொரு பெயர் வழங்கும். சோலையில் விருப்புடைய தென்பதைக் குறிக்கும் இது. அரங்கனும் வநப்ரியனேயாவன். "ஆராமம் சூழ்ந்தவரங்கம்" என்றவிடத்து வியாக்கியானத்தில் 'ஆராமம்' என்பதற்கு மற்றைய திவ்ய தேசங்களையே பெரியோர் பொருளாக வுரைத்தருளினர். அரங்கன் வநப்ரியனென்பது இதனின்றும் போதரும். ஆக, குயிலினையும் பொழிலரங்கனையும் வநப்ரிய சப்தத்தாற் குறிக்கலா


மென்க. குயில் 'மாவேறிமிழற்றும்' இயல்புடைத்தாதலின் மாவினிடத்துக் (மா—மாமரம்) குயிலுக்குள்ள பெருவிருப்பு உணரப்படும். அரங்கனேவெனில் "அல்லி மலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான்" என்றபடியே மாவினிடத்து [மா—திருமகள்] பேரன்புடையவன் என்க.

குயிலானது பஞ்சமஸ்வரத்தை இனிதாகக் கூவும் தன்மைத்து. "பாரத: பஞ்சமோ வேத:" என்று பாரதம் புகழ்படைத்ததுபோல் "ஐந்தாம் மறை" என்னத்தக்க ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்த மாமுனிகள் குயிலினையொப்பர் என்க. மேலும் பஞ்சமோபாயத்தை உணர்த்தியருளியவராவர் மாமுனிகள். இதனை "ஸ்வைராலாபைஸ் ஸூலபயஸி தத் பஞ்சமோபாயதத்வம்" என்று எறும்பியப்பா [வரவரமுனிசதகம் 11] தெரிவித்தருளினர்.

குயில் பரப்ருதமென்று வடமொழியில் வ்யவஹரிக்கப்படும். அது போல் மாமுனிகளும் பராபிமானத்திலே ஒதுங்கினவராவர். [பராபிமானம்—பரனாகிய எம்பெருமானது அபிமானம், ஆசார்யாபிமானம் என்றும் கொள்ளலாம்.]

ஆக இவ்வகைகளான் அழகிய மணவாளனுக்கும் மணவாளமாமுனிகட்குமுள்ள ஒருமைப்பாடு நம் ஸ்வாமியால் இனிதுணர்த்தப்பட்டது. வழிபாடியற்று தற்பொருட்டு கங்கைநீரைச் செம்பிலிட்டுக் "கங்கையம்புனல் நிறை செம்பு" என்று புகன்றாலும் விரிந்துபரந்த கங்கைநீர் முழுதும் செம்பிலடங்கியதென்று யாரும் நினையார். நம் ஸ்வாமியின் உபந்யாஸமென்னும் மொழிபட்டோடும் அமுதப்பெருக்கை இவ் விளையபுன் கட்டுரையில் அடக்கியதாகக் கூறுதலும் இது போன்றதே என்க.


—★—



இங்கு திருக்குமாரரோடு ஸேவைஸாதிக்கும் பெரியவர் ஆழ்வார் திருநகரி திருவாய்மொழிப்பிள்ளை (கீழத்திருமாளிகை) திருமலாசாரியர் ஸ்வாமி நான்கு மாதங்களுக்கு முன்பு திருநாடலங்கரித்தவர். நம்மாழ்வார்க்கு ஒழிவில் காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்த மஹாபாக்யசாலி. திருக்குமாரரான சீராமப்பிள்ளையும் அவரையொத்த பாக்யசாலியே. இவர் நீடூழி வாழ்க.

பண்டிதர்களின் பகுதி


தி. அ. கோபாலாசாரியர்



தி. அ. கிருஷ்ணமாசாரியர்

திருப்பதியில் வாழ்பவர்களான ஸ்ரீ உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை குன்றபாக்கம் கிருஷ்ணமாசாரியர். 2. ஷை கோபாலாசாரியர். இவ்விருவரும் ஸஹோதரர்கள். வித்வதக்ரஹாரமென்று ப்ரஸித்திபெற்ற மலையடி குன்றபாக்கத்தில் வாழ்ந்த ஸ்ரீமதுபயவே. தி. அ. வெங்கடவரதாசாரியர் ஸ்வாமியின்

திருக்குமாரரான (துரைஸாமியென்கிற) ராகவாசாரியரின் திருக்குமாரர்கள். இவர்
களில் முதல்வர் நியாயவேதாந்த வித்வான். தமிழ் வித்வானுமாவர். இரண்டா
மவர் வியாகரண ஸாஹித்யவித்வான். இவ்விருவரும் திருப்பதி கலாசாலையில்
முறையே நியாய வியாகரண ப்ரவசன துரந்தரர்களாக விளங்கி வருகிறார்கள்.
[இவர்களின் கநிஷ்டஸஹோதரன் லௌகிக வ்ருத்தியில் வாழ்ந்துவருகிறான்.]
இவர்கள் எனக்கு (P. B. A.) ஸாக்ஷாத் ஸ்யால புத்திரர்கள். இவர்களின் திருத்
தகப்பனாரான ராகவாசாரியர் அறுபது பிராயமளவும் ஸ்ரீகாஞ்சியில் ஸ்கூல் மேஸ்ட
ராக வாழ்ந்து, விச்ராந்திபெற்றபின் ஏறக்குறைய பதினாறு வருஷகாலம் திருமலை
யிலும் திருப்பதியிலும் மங்களாசாஸனபரராய் விளங்கிவந்து நேற்று புரட்டாசி
மாதத்தில் திருப்பதியில் ஸ்வக்ருஹத்தில் திருநாடலங்கரித்தார். அவருடைய திருவத்யயன கோஷ்டியின் படம் காண்க.



ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதிகளான திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமியும் சிறிய ஜீயர்ஸ்வாமியும் தொடக்க கோஷ்டியையும் சாத்துமுறை கோஷ்டியையும் அலங்கரித்தெழுந்தருளியிருந்தது பரமக்ருபா பரீவாஹம். இவ்விரு ஸஹோதரர்களிடத்திலும் பெரிய ஸ்வாமிகள் ஆஸ்தானத்தை அலங்கரித்த நாள் முதலாகவே தண்ணளிமிக்கவர்.

—※—



ஸ்ரீ. உ. வே. வித்வான்.

N. பக்தவத்ஸலமையங்கார், M. A; M.O.L., Mylapore.

இப்பெரியார் நெல்லூரில் பிறந்தவர். நெல்லூர் ஸ்ரீரங்கமன்னார் ஸன்னிதியில் இரண்டாந் தீர்த்த மிராசு குடும்பஸ்தர். ஸம்ஸ்கிருதம் தெலுங்கு தமிழ் ஆங்கிலம் ஆகிய நான்கு பாஷைகளிலும் ஸமமான ஞானமுடையவர். ஸ்ரீராமகிருஷ்ணப்ரபா என்கிற தெலுங்கு பத்ரிகைக்கு நெடுநாளாக உதவீயாசிரியராக இருந்து வருகிறார். ஆங்கில ஆந்திர பாஷைகளில் மிகச்சிறந்த எழுத்தாளர். தெலுங்கு பாஷையில் நிகழும் நமது பதிப்புகளுக்கெல்லாம் இவரே மிக்க துணைபுரிபவர். ... ... *

அடியேனுடைய சிந்தனைகள் (ப்ர-அ.)

அடியேன்பால் தனிப்பட்ட அன்புடைய பெரியீர்காள் !

மேலேகாணும் மகுடமிட்ட ஒருபெரியநூல் எழுதவேணுமென்று அடியேனுக்கு அவா மிக்கு வருகின்றது. அதற்கு முகவுரைபோல் இச்சுருக்கமானவிண்ணப்பம் காணீர். அடியேன்பால் அந்தரங்க ப்ரீதியுள்ளவர்களைமட்டும் நோக்கியே இந்த விண்ணப்பமென்பதை மீண்டும் விளம்புகிறேன். அடியேன் எண்பத்திரண்டாவது பிராயம் முடியுந்தருவாயிலிருக்கிறேனென்பதை மறந்திருக்கமாட்டீர்கள். 21—2—1964 தேதியன்று அடியேனுடைய வாழ்நாள் முடிவதாகவே யிருந்தது. அதற்கு முன்பும் 1958ல் வடநாட்டு யாத்திரையொன்றில் ஸ்ரீநாதத்வாராவுக்கும் ஸித்தபூருக்குமிடையில் நள்ளிருளில் கோரமான விபத்தொன்று நேருவதாயிருந்து தப்பிப்பிழைத்தேனென்பதை அப்போதே ஸ்ரீராமாநுஜன் வெளியிட்டிருக்கின்றது. ஸமீபத்தில் 27—10—72 தேதியன்று ஒரு சிறுபயணத்தில் அசிந்திதமாக நேர்ந்ததொரு ஸம்பவத்தை கர்ணாகர்ணிகையாகக் கேட்டறிந்து "ஏதோ பெரிய விபத்தாமே, என்ன?" என்று கடிதமூலமாகக் கேளாதவர்களில்லை. இது பற்றிப் பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் இற்றைக்கும் வந்துகொண்டிருக்கின்றன. "இது ஆபத்தன்று, ஆச்சரியம், அற்புதம்" என்றே அடியேன் விடையிறுப்பது. ஆசார்யஹ்ருதயத்தில் "மூன்று தத்துக்குப் பிழைத்த" என்றொரு ஸூக்தி. ஆழ்வார்க்கு மூன்று கண்டங்கள் நேர்ந்து தப்பிப்பிழைத்ததாக அருளிச்செய்தபடி. அந்த மூன்று கண்டம் இன்னதென்று அறியப்பெற்றால் அவை ஆழ்வார்க்கு நேர்ந்த கண்டங்களல்ல எம்பெருமானுக்கு நேர்ந்தவையேயென்று உண்மையுணரலாம்.

நாற்றிசையிலும் அடியேனுக்குப் பலபல ஸுஹ்ருந்மணிகள் பல ஜாதிகளிலுமிருப்பதால் "ஆரோக்யம் தெரிவிக்கவேணும்" என்று எழுதிக்கொண்டே வருகிறார்கள். காஞ்சீபுரத்தில் தபால் டிலவரிகள் மூன்று விசையுண்டு. ஒவ்வொரு விசையிலும் இத்தகைய கடிதம் கிடைத்துக்கொண்டேயிருக்கும். எல்லாருமறியச் சுருக்கமாக வெளியிடுகிறேன். உடலில் எவ்விதமான பிணியுங்கிடையாது. பரிபூர்ணமான ஆரோக்யமே. வயதுக்குத்தக்கபடி நேத்ரபாடவம் குறைந்திருப்பதுண்டு. லகுசிகித்ஸைகள் ஏதோ நடந்து வருகின்றன. ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி வானமாமலை சின்னகலியன் ஸ்வாமி சரமகாலத்தில் (ஒருவருஷத்திற்குமேலாக திருக்கண்பார்வை அடியோடில்லாமலே யெழுந்தருளியிருந்தார். அப்போது நியமனம் பெற்று ஸ்ரீஸ்வாமியை ஸேவிக்க வானமாமலைக்கு விடைகொண்டேன். அப்போது மடத்தைவிட்டு மேலக்கோவிலில் எழுந்தருளியிருந்தபடி. அடியேன் விடைகொண்டதறிந்து "ந த்வா பச்யாமி கௌஸல்யே ஸாது மா பாணிநாஸ்ப்ருச" என்கிற தசரத வாக்கியத்தை ஸாதித்துக்கொண்டு "கைமேல் என்கை வைத்து" என்கிற முறையில் அணிமிகு தாமரைக் கையைத் தந்தருளிச்சோதிவாய்திறந்து பணித்தவை—அன்றிரா முழுவதும் துஞ்சாமுனிவராய் ஸாதித்தவை..............(இதை இப்போது ஸசேஷமாக நிறுத்துகிறேன்.

சில நாட்களாக இரவில் ஒரு நொடியும் உறக்கமின்மையாலே குர்வத்ரூபங்களான கரணங்களில் தலையாய கரணம் வாளாகிடக்கமாட்டாமையாலே எண்ணிறந்த சிந்தனைகள் ஒன்றின்மேலொன்றாக நிகழ்கின்றன. அவை அடைவே [illegible].

உபந்யாஸக ஸௌபாக்யம்

(முன் தொடர்ச்சி)

8. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் திவ்யத்ரயம்

உலக வழக்கிலும் நூல்வழக்கிலும் மிகச் சிறந்ததைச் சொல்லுமிடத்து திவ்யமென்னுஞ் சொல் யாவராலும் கையாளப் படுகிறது; ததீயாராதனை திவ்யமாயிருந்தது. உபந்யாஸம் திவ்யமா யிருந்தது அழகிய மணவாளன் ஸேவை அதி திவ்யமாயிருந்தது—என்றிப்படியே எங்கும் வார்த்தைப்பாடு உள்ளது பகவத் கீதையில் கண்ணபிரான் தன்னுடைய அவதாரத்தையும் சேஷ்டிதத்தையும் சிறப்பாகச் சொல்லு மிடத்து "ஜந்ம கர்ம ச மே திவ்யம்" என்கிறான். விச்வரூபம் காண்பதற்காக அர்ஜுநனுக்குச் சிறந்த சக்ஷுஸ்ஸைக் கொடுப்பதாக அருளிச் செய்யுமிடத்து "திவ்யம் ததாமி தே சக்ஷு:" என்கிறான் இவற்றால் திவ்யபதத்தின் சீர்மை அறியத்தக்கது.

நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்றையும் சொல்லுமிடத்து திவ்யபதத்தைச் சேர்த்தே சொல்லிவருவதானது தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. ப்ரமாணங்களில் தலையானது திவ்ய ப்ரபந்தம். ப்ரமாதாக்களின் தலையானவர்கள் திவ்ய ஸூரிகள். ப்ரமேயங்களில் தலையானவை திவ்ய தேசங்கள். இப்படி எல்லாம் திவ்யமாகத் திகழுமழகு நம்முடைய ஸம்ப்ரதாயத்திற்கே அஸாதாரணமான செல்வமா யிருக்கும். இதில் ஒரு விஷயம் ஆராய்ச்சி முறையில் அறிவிக்கப்படுகின்றது.

மதுரகவியாழ்வாரும் ஆண்டாளுமுள்பட ஆழ்வார்கள் பன்னிருவரு மருளிச் செய்த திவ்ய ப்ரபந் தங்களே நாலாயிர திவ்ய ப்ரபந்தமென்று வழங்கப் பெறுகின்றன. இவற்றுள் இராமாநுச நூற்றந்தாதியும் அடங்குகின்றது. திருப்பல்லாண்டு, திருப்பாவை, கண்ணி நுண் சிறுத்தாம்பு. இராமாநுச நூற்றந்தாதி ஆகிய இந்நான்கும் திவ்ய ப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான வொரு பெருமையைப் பெறுவதற்கு உரிமையற்றவை போல் காணப்படுகின்றன. ஏன்? திவ்யப்ரபந்தங்களுக்கு அஸாதாரணமான பெருமை ஏதென்னில், உகந்தருளின நிலங்களாகிய திவ்ய தேசங்களை விசேஷமாகப் பேசுகையாம். எம்பெருமா னுடைய பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதார மென்னும் ஐந்து நிலங்களும் திவ்யப் பிரபந்தங்களில் பேசப்பட்டிருந்தாலும் அர்ச்சாவதாரப் பெருமைகளைப் பேசுவதிலேயே இவற்றுக்கு விசேஷ நோக்கு என்பது ஆசாரியர்கள் நிலையிட்ட விஷயம். வேதத்திற்குப் பரத்வத்திலே நோக்கு; பாஞ்சராத்ரங்களுக்கு வ்யூஹத்திலே நோக்கு; இதிஹாஸ புராணங்களுக்கு விபவத்திலே நோக்கு; தர்மசாஸ்த்ரங்களென்கிற ஸ்ம்ருதிகளுக்கு அந்தர்யாமியிலே நோக்கு; திவ்ய ப்ரபந்தங்களுக்கு அர்ச்சையிலே நோக்கு—என்னும் விஷயமானது ஆசார்ய ஹ்ருதயத்தில் "அதவா, வேதவேத்யந்யாயத்தாலே பரத்வ பர முதுவேதம்" என்று தொடங்கியுள்ள (70) சூர்ணையின் வியாக்கியானத்திலே விசதமாகக் காணலாகும். நாம் திவ்ய தேசங் களின் பெருமைகளை யநுபவிக்க வேணுமானால் திவ்யப்ரபந்தங்களிலல்லது வேறு எதிலும் அனுபவிக்க முடியாதன்றோ. ஆகவே திவ்ய தேசப்பெருமையைப் பகர்வதே திவ்யப்ரபந்தங்களுக்கு அஸாதாரண மான பெருமையென்பது நிர்விவாதமாகும்.

இப்படிப்பட்ட பெருமை திருப்பல்லாண்டு முதலிய மேலே குறித்த நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கு ஸம்பவிக்க ப்ரஸக்தியில்லாமலிருக்கிறது. ஏனெனில்; 1. பெரியாழ்வார் பாண்டியராஜனுடைய ஸபை யிலே பரதத்வ நிர்ணயம் பண்ணி விரைந்து கிழியறுத்து யானையின்மீது ஊர்வலம் வருகையில் அந்த மஹோத்ஸவத்தைக் காணவந்த பரமபதநாதனை நோக்கியே பல்லாண்டு பாடித் திருப்பல்லாண்டென்கிற திவ்யப்ரபந்தத்தை யருளிச் செய்தாராதலால் அப்போது திவ்யதேசப் புகழ்ச்சி எதுவும் செய்ய ப்ரஸக்தி யில்லை யாயிற்று.

2. திருப்பாவை கண்ணபிரானுடைய விபவ காலத்திலேயே நேராக ஆய்ச்சிகள் ஆசரித்த படியை அநுகரித்துப் பேசப் பிறந்த பிரபந்த மாதலால் இதிலும் திவ்யதேசப் புகழ்ச்சி எதுவும் செய்ய ப்ரஸக்தி யில்லையாயிற்று.

3. கண்ணிநுண் சிறுத்தாம்பு, நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்டு அவரைத் துதிப்பதற் கென்றே தோன்றின பிரபந்த மாகையாலும்,

4. இராமாநுச நூற்றந்தாதி எம்பெருமானாரையே தெய்வமாகக்கொண்டு அவரைத் துதிப்பதற் கென்றே அவதரித்ததாகையாலும் இவற்றிலும் திவ்யதேசப் புகழ்ச்சிக்கு ப்ரஸக்தியில்லையாயிற்று.

ஆயினும் திவ்ய தேச ப்ரஸ்தாவமில்லாத பிரபந்தம் திவ்யப்ரபந்தமாகமாட்டா தென்று கருதியே மேற்சொன்ன நான்கு பிரபந்தங்களிலும் அந்தந்த ப்ரபந்த கர்த்தாக்கள் திவ்யதேச ப்ரசம்ஸையை ஒருவாறு புகுத்தியுள்ளார்கள்.

1. திருப்பல்லாண்டில் திவ்யதேச ப்ரசம்ஸையைப் புகுத்தியிருக்கிற விதம் யாதெனில்; அதில் ★அல்வழக் கொன்றுமில்லா ★ என்கிற பதினோராம் பாட்டில், பாகவதோத்தமரான செல்வநம்பி யென்னு மொரு பெரியாரை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டத் திருவுள்ளம்பற்றி, அப்பெரியார் திருக்கோட்டியூ ரென்னும் திவ்யதேசத்தில் வாழ்ந்தவராதலால் அதனைக் கூறும் வழியாலே திருக்கோட்டியூரை ப்ரசம்ஸித் திருக்கிறார். ★ அணி கோட்டியர்கோ னபிமான துங்கன் செல்வனைப் போல ★ என்றவிடத்து, அணி கோட்டி யென்றது திருக்கோட்டியூரேயாம். இப் பிரபந்தத்தில் ஒருவாறு திவ்யதேச ப்ரஸ்தாவம் வருவதற்காகவே ★ அணிகோட்டியர்கோன் ★ என்கிற ஸ்ரீஸூக்தி புகுவிக்கப் பட்டதென்க. மேலுள்ள தான பலச்ருதிப் பாசுரத்தில் ★ வில்லிபுத்தூர் விட்டு சித்தன் விரும்பிய சொல் ★ என்றவிடத்து ஸ்ரீ வில்லிபுத்தூராகிற திவ்யதேசத்தின் ப்ரஸ்தாவ மிருந்தாலும் அதனால் த்ருப்தியுண்டாக வழியில்லை போலும்.

2. இனி கண்ணிநுண் சிறுத்தாம்பிலும் திவ்யதேச ப்ரஸ்தாவம் ஒருவாறு புகுந்திருக்கின்றது; அதில் பாசுரந்தோறும் **குருகூர்** என வருவதால்.

3. இராமாநுச நூற்றந்தாதியில் ★ கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனை ★ என்றும் ★தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் ★ என்றும் ★ கண்ணமங்கை நின்றானைக் கலை பரவும் ★ என்றும் ★பொன்னரங்க மென்னில் மயலே பெருகுமிராமானுசன் ★என்றும் ★நிறைவேங்கடப் பொற்குன்றமும்★ என்றும் ★ இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலை யென்னும் பொருப்பிடம் ★ என்று மிங்ஙனே பல பாசுரங்களில் ப்ராஸங்கிகமாக திவ்யதேச ப்ரசம்ஸை செய்திருக்கையாலே அதுதன்னிலும் திவ்யதேச ப்ரதிபாதநம் குறையற்றதாயிற்று.

4. இனி திருப்பாவையில் இக்குறையில்லாமையை விவரிக்கிறோம். உண்மையில் திருப்பாவையில் ஒரு திவ்யதேசத்தின் ப்ரசம்ஸையும் ப்ராப்தமாகவில்லை. ★ திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி அங்கு அப்பறை கொண்டவாற்றை ★ என்று, அக்காலத்தில் கோபிகள் செய்தபடியை அப்படியே அநுகாரம் செய்தும் அநுவாதம் செய்தும் அருளிச்செய்த பிரபந்த மன்றோ திருப்பாவை. இதில் அவ்வாய்ச்சிகள் செய்யாத திவ்யதேச ப்ரசம்ஸையை ஆண்டாள் செய்ய ப்ரஸக்தி இல்லையன்றோ. ஆனால் யசோதைப் பிராட்டி கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டினபடியை அவளுடைய பாவனையினால் கூறுகின்ற பெரியாழ்வார் ★ குடந்தைக் கிடந்தானே! தாலேலோ ★ என்றது போலவும், ஆய்ச்சிகள் கண்ணபிரான் செய்த தீமைகளை யசோதைப் பிராட்டியிடம் வந்து முறையிட்ட படியைச் சொல்லுமிடத்து ★ சாளக்கிராமமுடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான் ★ என்றது போலவும், ★ மன்னுகுறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள் சூழ் சோலை மலைக்கரசே கண்ணபுரத்தமுதே!... ஆடுக செங்கீரை ★ என்று யசோதை செய்யாத திவ்யதேச ப்ரசம்ஸைகளை ஆழ்வார்தாம் செய்திருப்பது போலவும், திருவாய்மொழியில் ★ சூழ்விசும்பணி முகில் என்னும் பதிகத்திலே பரமபதாநுபவங்களைப்

பேசுகின்ற நம்மாழ்வார் அங்கு திவ்யதேச ப்ரஸக்தி செய்யவேண்டிய அவசிய மில்லாதிருக்கவும் ★குடந்தையென் கோவலன் குடியடியார்க்கே ★ என்று திருக்குடந்தைப் பதியின் ப்ரசம்ஸையைச் செய்திருப்பது போலவும் ஆண்டாளும் திருப்பாவையில் திவ்யதேச ப்ரசம்ஸை செய்யக் கருதினுல் பலபடியாக அதைப் புகுத்தமுடியும்; அது அஸாத்தியமன்று. ★ வல்லானை கொன்ருனை ★ என்றும் ★ மல்லரை மாட்டி தேவாதி தேவனை ★ என்றும் திருவாய்ப்பாடியி லுள்ளவர்கள் பேசமுடியாத கதைகளை யிட்டுப் பேசியிருப்பது போல "அரங்கத் தரவணேமே லமர்ந்தானைப் பாட வெழுந்திராய்" "வேங்கடத்தெம் வித்தகனை யேத்தவாராய்" என்று பேசியிருக்கலாம். ★ அன்றிவ் வுலக மளந்தாயடிபோற்றி, சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய் திறல் போற்றி ★ என்று வேறு அவதார சேஷ்டிதங்களைச் சொல்லி மங்களாசாஸனம் செய்தது போல ★ அரங்கத்தரவணேமே லமர்ந்தா யடிபோற்றி ★ மாலிருஞ்சோலை மாயனே யடிபோற்றி ★ என்றிப்படி திவ்யதேச ப்ரசம்ஸை பண்ணி மங்களாசாஸனம் செய்திருக்கலாம். கோவிலைப் பற்றின பேச்சு அடியோடில்லாமல் திருப்பாவையை முடித்தது ஏன்? என்று ஆராய்ச்சி செய்ய ப்ராப்தமாகும். இதற்குத் தெரிவிக்கிருே மிங்கு.

திருப்பாவையில் கோவில் பேச்சு அடியோடு இல்லாதிருந்தால் இதனைப் பெரியோர்கள் திவ்ய ப்ரபந்தமாகக் கொண்டு ஆதரித்திருப்பர்களோ? இதில் நான்கிடங்களில் கோவில் பேச்சு அழகாக வுள்ளது. (பாட்டு. 6) ★ புள்ளரையன் **கோவில்** வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ? (14.) ★ தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்ருர். ★ (16) ★ கோயில் காப்பானே. ★ (23) ★ உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளி ★ என்னு மிப்பாசுரங்களில் கோயில் ப்ரஸ்தாவம் வந்திருப்பது குறிக்கொள்ளத் தக்கது. பொதுவாகக் **கோயில்** என்று உள்ளதேயன்றி ஒரு திவ்யதேச விசேஷம் சொல்லிற் றில்லையே யென்று குறையுற வேண்டா; திருவரங்கத்திற்குக் கோயிலென்பதே அஸாதாரணமான வ்யபதேசம். பெரியாழ்வார் தமது திருமொழியில் (2-9-4.) ★ கொண்டல் வண்ணுவிங்கே போதராயே **கோயிற் பிள்ளா** யிங்கே போதராயே ★ என்கிருர். இங்குக் கோயிலென்றது ஸாமாந்ய வாசகமன்று. தென்னுடும் வடநாடுந் தொழநின்ற திருவரங்கந் திருப்பதியையன்றே விசேஷித்துச் சொல்லுகிறது. ஆனுல், திருப்பாவையில் கோயிலென்று வந்துள்ள நான்கிடங்களிலும் ஸ்ரீரங்கந்தான் விவக்ஷிதமோ வென்று கேட்டுவிட வேண்டா. அர்த்த சக்தியென்பது வேறு, சப்த சக்தியென்பது வேறு. சப்த சக்தியைப் பற்றின நிர்வாஹமிது. ★ புள்ளுஞ் சிலம்பினகாண் ★ என்கிற பாட்டிலும் ★ உங்கள் புழைக்கடை ★ என்கிற பாட்டிலும் அர்ச்சாவதார ஸன்னிதியை யுத்தேசித்தே கோயிலென்னுஞ் சொல் பிரவேசிப்பிக்கப்பட்டிருக்கின்ற தென்பது நிஸ்ஸந்தேஹம். ஆக, திருப்பாவையிலும் திவ்யதேச ப்ரசம்ஸை யுள்ளதென்று நிரூபிக்கப் பட்டதாயிற்று. ... ... ★

---

9. எம்பெருமானுரளித்த அபயப்ரதானம்

ஸ்ரீ ராமாயணத்தில் அபயப்ரதான மென்பது ப்ரஸித்தமான வொரு கெட்டம். விபீஷணுழ்வான் மிகுந்த ஆர்த்தியோடு கடற்கரையிலே வந்து சரணுகதி செய்தபோது ஸுக்ரீவமஹாராஜர் முதலரனேர் அவனை அங்கீகரிக்கலாகாதென்று வலிதாக ஆக்ஷேபித்தகாலத்தில் அவனுடைய வுள்ளம் சாலவுமஞ்சிக் கிடந்தது. அச்சமயத்தில் பெருமாள் அவனுக்கு அபயமளித்தார். அப்போது பெருமாளருளிச் செய்த ★ **ஸக்ருதேவ ப்ரபந்நாய** ★ என்கிற சரமச்லோகத்திலே 'அபயம் ததாமி' என்கிற வாக்கிய மிருப்பதனுல் அந்த கெட்டம் அபயப்ரதாந கெட்டமென்று வழங்கப்பட்டு வருகிறது. ஸ்வாமி யெம்பெருமானுர் ஒருநாள் ஒரு பெரிய திருவோலக்கத்திலே அந்த கெட்டத்தை மிக விரிவாக உபந்யஸித்தருளா நின்ருர், ★ த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: ★ என்கிறபடியே புறம்புண்டான பற்றுக்களை யடைய வாஸனையோடே விட்டு விபீஷணழ்வான் ★ ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம் ★ என்று சொல்லி வானர முதலிகளைப் பிரார்த்திக்க அவர்கள் இவ்விபீஷணனை அனுகூலனுகக் கொள்ளாமல் பிரதிகூலனுகவே கொண்டு அவன்மீது கற்களை விட்

டெறிவது, பெருமாளிடம் ஆக்ஷேபிப்பது முதலாகப் பல தீமைகளை யிழைக்கத் தொடங்கினூர்கள்—என்னு மிவ்விஷயத்தை ஸ்வாமி உபந்யஸித்தருளா நிற்கையில் அப்போது ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்த வர்களில் ஒருவரான பிள்ளையுறங்கா வில்லிதாஸர் கோஷ்டியில் நின்று எழுந்து விக்கிவிக்கியழுது தம்முடைய வொரு பெரிய ஸந்தேஹத்தை விண்ணப்பஞ் செய்து இதைப் பரிஹரித் தருளினூலொழிய மேலே கதை கேட்க விருப்பமில்லாமையைக் கூறி நின்றூர்.

அவர் விஜ்ஞாபித்த ஸந்தேஹமாவது—விபீஷணூழ்வான் உண்மையான பரமபக்தன்; அவனுக்கு ஆர்த்தி முதலிய அதிகார பூர்த்தியில் யாதொரு குறையுமில்லை; ஆகிஞ்சந்யமும் அநந்ய கதித்வமும் கபடமாகவல்லாமல் உண்மையாகவே உண்டாகி நெஞ்சுகனிந்த பக்தியுடன் வந்து சேர்ந்த இவனுக்கே பகவத் கோஷ்டியில் ப்ரவேசம் எளிதாகக் கிடைக்கவில்லை யென்றும், பகவானுக்கு அந்தரங்க மந்திரி களாக இருந்தவர்களால் மிகுந்த பரிபவமும் ஆக்ஷேபமும் விளைந்தன வென்றும் கண்டால் அவ்விபீஷணூழ் வானுடைய அதிகாரத்தில் நூற்றிலொன்றுகூட இல்லாத எம்போலியர்க்கு பகவதங்கீகாரத்தைக் கனவில் கூடக் காண்பதற்கு ப்ரஸக்தியில்லையன்றே; ஆகவே எம்போலியர் உஜ்ஜீவிக்க வழியுண்டோ இல்லையோ என்று நெஞ்சு தளும்பி நிற்கின்றது என்பதாக.

இது எல்லோருக்குமே ஜனிக்கவேண்டிய ஸந்தேஹந்தான். ஆனூல் அந்த ஸமயத்தில் பிள்ளை யுறங்கா வில்லிதாஸரொருவர்க்கே ஜனித்தது. இந்த ஸந்தேஹத்திற்குப் பரிஹாரமுறை என்னவென்று தெரிந்துகொள்ள ஒவ்வொருவரும் குதூஹலங்கொள்ள வேண்டியதே யாகும். கேண்மின். எம்பெரு மானூர் உடனே அவர்க்குப் பரமத்ருப்திகரமாகப் பணித்த ஸமாதானம் யாதெனில்; விபீஷணூழ்வானைப் போலே நாம் எம்பெருமானைப் பற்றினூலன்றே இப்படி ஸந்தேஹித்து இடிவிழுந்து நிற்கவேண்டும். நாம் எம்பெருமான் கைபார்த்திருக்கு மவர்களல்லோங்காணும்; உமக்கு நானுண்டு, எனக்குப் பெரிய நம்பியுண்டு.''

இதன் கருத்தாவது, எம்பெருமான் மோக்ஷமளிக்கவும் வல்லவன், மேன்மேலும் ஸம்ஸாரத்திலே தள்ளவும் வல்லவன். நிக்ரஹாநுக்ரஹங்களுக்குப்பொதுவான ஸ்வாதந்திரிய முடையவனூகையாலே அவனைப் பற்றினூர்க்கு நெஞ்சு தளும்பியே கிடக்க நேரும். அவனைப் போலன்றிக்கே அநுக்ரஹமே வடிவெடுத்த ஆசாரியர்களைப் பற்றினூர்க்கு ஸந்தேஹ கந்தமுமின்றிக்கே மார்விலே கைவைத்து உறங்க லாம்படியிருக்கும் என்கை, இவ்வர்த்தம் மஹர்ஷிகளின் வசனத்தாலும் தேறி நின்றது. ☆ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம், ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யா ரதாத்மநாம் ☆ என்கிற ப்ரமாணத்தை இங்கே அநுஸந்திப்பது. இதன் பொருள்; எம்பெருமானைப் பற்றினூர்க்கு ஸத்கதி ப்ராப்தியாகிற ஸித்தியுண்டோ இல்லையோ என்கிற ஸந்தேஹமுள்ளது; தத்பக்தர்களாகிற பாகவதர்களைப் பற்றினூர்க்கு அப்படிப்பட்ட ஸந்தேஹம் உதிக்கவே மாட்டாது என்பதாம்.

இங்ஙனமே அவரவர்கள் தம் தம் ஆசாரியர்களைப் பணிந்து உஜ்ஜீவித்தலென்பது இருக்கச் செய்தேயும் ★ தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர ☆ என்று பூருவர்கள் ஒருமிடறுக நிஷ்கர்ஷித்திருக்கையாலே ஆசார்யரென்கிற சொல்லுக்குப் பொருளாயிருக்குந் தன்மை எம்பெருமானூ ரொருவர்க்கே உரித்தாகவுள்ளதாதலால் அவருடைய திருவடி ஸம்பந்தத்தை அநுதினமும் சிந்தித்திருப் பார்க்கு விசாரலேசமு மில்லையென்று தெளிவது. ... ... ★

10 ஐதிஹ்யங்களின் ப்ராமாண்யம்

முதன் முதலாக இன்னுரால் சொல்லப்பட்டதென்று தெரிந்துகொள்ள முடியாமல் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிற புராதந வ்ருத்தாந்தங்களுக்கு ஐதிஹ்யமென்று பெயர். 'இதிஹ' என்கிற வட சொல்லின் மேல் 'ஸ்வார்த்தே ஷ்யஞ்' ப்ரத்யயம் ஏறி ஐதிஹ்யமென்ருயிற்று. **இதிஹ, இதிஹ** இப்படியாம் இப்படியாம் என்று வெகுகாலமாகச் சொல்லிவரும் கதை ஐதிஹ்யம் என்கிறதாயிற்று. பட்டர் ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்தில் திருவரங்கம் பெரிய கோயிலிலுள்ள மநுஷ்ய திர்யக் ஸ்தாவர வர்க்கங்களை நித்ய ஸூரிகளாகவும் முக்தர்களாகவும் முமுக்ஷுக்களாகவும் கொள்ளவேணுமென்பதைத் தெரிவித்தருளவேண்டி யருளிச் செய்த ☆ அஹ்ருத ஸஹஜதாஸ்யாஸ் ஸூரய:☆ இத்யாதிச்லோகத்தில் நான்காம் பாதத்தில் ☆ இதிஹ ஸ்ம ப்ராஹு:☆ என்ருர்.—இது நான் புதிதாகச் சொல்லுவதன்று; அநாதிகாலமாகப் பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது.' என்கிற விவக்ஷையில் 'இது ஹ ஸ்ம ப்ராஹு:' என்றருளிச் செய்தபடி.

கர்ண பரம்பரையாகவே வந்த ஐதிஹ்யங்கள் கால விசேஷங்களில் ப்ராமாணிகர்களால் ஏடு படுத்தப் படுகின்றன. அங்ஙனம் ஏற்பட்ட ஐதிஹ்யங்கள் நம்பத்தகுந்தவைதாஞ? என்கிற விசாரம் பிற்காலத்தவர்களுக்கு விளைவதுண்டு. ஏற்படுத்தினவர்கள் யாவரோ, அவர்களிடத்தில் தேவதாப்ரதி பத்தி யுள்ளவர்கள் நம்புவதும், மற்றையோர்கள் நம்பாமற் போவதும் உள்ளது. பழைய ஏட்டுப் பிரதி களை அச்சுப்பதிப்புக்குக் கொண்டுவருங் காலத்தில் அவரவர்கள் [முத்ராபகர்கள்] யதேஷ்டமாகப் புதிய கதைகளைச் சேர்ப்பதும் பழைய கதைகளை மாறுபடுத்துவதும் உண்டு. இதனுல் ஐதிஹ்யங்களைப் பூர்த்தி யாக நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறதென்று சில பல பெரியோர்கள் வருந்திச் சொல்ல நாம் கேட் டிருக்கிறோம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஆழ்வார்கள் விஷயமாகவும் ஆசாரியர்கள் விஷயமாகவும் பல ஐதிஹ்யங்கள் ப்ரஸித்தமாக வுள்ளன. இவற்றில் இதர மதஸ்தர்களின் ப்ரதிபத்தி எப்படிப்பட்ட தென்கிற விசாரம் நமக்கு வேண்டா. நம்முடைய தர்சநத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் இவ்வைதிஹ்யங் களை ஸமீசீயான ப்ரதிபத்தியுடன் கொண்டாடி வருகிருர்களா வென்று பார்த்தால் இது தேறுவதில்லை. விச்வகுணதர்சகாரர் "விததைதிஹ்ய ஸஹஸ்ரவர்ணநே" என்று ஒன்று எழுதிவைத்துப் போனுர். அதை ஒரு நிதியாகக் கொண்டு ஒவ்வொரு விஷயத்திலும் அதையே யெடுத்துச் சொல்லுவார் பலருளர். பொய்யான ஐதிஹ்யங்களும் கலந்துபோயிருக்கின்றன வென்பதை நாமும் இசைவோம். தாவதா, ஐதிஹ் யங்கள் யாவும் பொய்யானவையென்று சொல்லி விடுவது யுக்தமன்று.

திருவள்ளூரில் திவான்பகதூர் T.T, ரங்காசாரியர் என்று ஒரு மஹநீயர் இருந்தார். இவருடைய காலம் நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன்பு என்று கொள்ளுங்கள். இவர் லௌகிக உத்யோகத்தில் சிறந்த பதவியில் வாழ்ந்தவராயினும் வைதிகத்திலும் நன்ருகப் படித்திருந்தவர். உபய வேதாந்த க்ரந்தங்களையும் அதிகரித்திருந்தவர். வேதாந்த தீபிகையென்கிற பத்ரிகைக்குச் சில வருஷங்கள் ஸம்பாதகராகவுமிருந்த்வர். இந்த மஹான் நவீன ஆராய்ச்சித் துறையில் அபிநிவேசமுள்ளவராதலால் நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வழங்கும் ஐதிஹ்யங்களை ஆராயப் புகுந்து விப்ரதிபத்திகள் செய்யத் தொடங்கினுர். முந்துற முன்னம் திருமங்கையாழ்வாருடைய சரித்திரத்தை விமர்சிக்கப் புகுந்து, அவ்வாழ்வார் நாகைப்பட்டினத்தில் ஸுவர்ணமாயிருந்த ஜைந பௌத்த விக்ரஹங்களை "ஈயத் தாலாகாதோ இரும்பினுலாகாதோ?.....மாயப் பொன் வேணுமோ மதித்துன்னைப்பண்ணுகைக்கே" என்று சொல்லி ப்ரஹரித்து ஹரித்துக் கொண்டுவந்து ஸ்ரீரங்க பிராகார மண்டபாதி நிர்மாண கைங்கர்யத்தில் உபயோகித்தார் என்று குருபரம்பராப்ரபாவத்தில் எழுதப்பட்டுள்ள சரித்திரத்தை யெடுத்துக்கொண்டு "இது மிகவும் அநீதியான வரலாறு; ப்ராமாணிகர்களாய் யோக்யர்களாய்ப் பரம பக்தர்களான ஆழ்வார் கள் இப்படி அநீதியான செயல்களைச் செய்தார்களென்று எழுதிவைப்பது நமது பரம பாவனமான மதத் திற்கு இழுக்காகும்" என்று விபுலமாக எழுதி வேதாந்ததீபிகையில் பிரசுரமும் செய்துவிட்டார். அப்போது அதைக்கண்ட நாம் 'ஒரு ப்ரதிஷ்டிதரான மஹான் இப்படி ஸஹஸா எழுதிவிட்டாரே!' என்று

மிக வருந்தி அவருக்கு அந்தரங்கமாக வொரு விண்ணப்ப மெழுதலானேம். (அதாவது) வெறுந் தமிழ் வசன நூற்களில் மட்டும் காணும் ஐதிஹ்யங்களில் தேவரீர்கள் எவ்விதமாக ஆராய்ச்சி செய்தாலும் செய்க. கூரத்தாழ்வான், பட்டர், வேதாந்த தேசிகன் போன்ற பூருவாசாரியர்களின் ச்லோகபத்தங்களாய் ஸர்வ ஸம்ப்ரதிபந்நங்களான திவ்யஸூக்திகளினால் நிர்விவாதமாக ஏற்படுகிற ஐதிஹ்யங்களிலும் விவாதப்படு வதும், ஹாஹாகாரம் செய்வதும் தேவரீரைப் போன்ற ஆஸ்திகர்களுக்குத் தகுமா? பட்டர் ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்தில், ★ ஜிதபாஹ்ய ஜிநாதிமணிப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணிமண்டப வப்ரகணாந் விததே பரகால கவிः ப்ரணமேமஹி தாந்★ என்கிற ச்லோக ரத்நத்தில் நிஸ்ஸந்தேஹமாகப் பொறித்து வைத்த திருமங்கையாழ்வார் சரித்திரத்தை தேவரீர் அநியாயக் கதையென்று எழுதிவிட்டால் இதை ஸ்ரீவைஷ்ணவ வுலகம் ஏற்குமா? அந்த ச்லோகம் பிற்காலத்தவர்களால் கல்பிக்கப்பட்டு பட்டர் ஸ்ரீ ஸூக்திமத்யே புகுத்தப்பட்டதென்று தேவரீர் திருவுள்ளமா? இவ்வளவு கம்பீரமான ச்லோகம் பட்டர் தவிர வேறொரு வ்யக்தியால் நிருமிக்க முடியுமா? ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு அவதரித்த இந்த ச்லோகத்தைக் காற்கடைக்கொண்டு நெஞ்சில் தோன்றினதை எழுதி வெளியிட்டுவிடுவது யுக்தமாகுமா?.........இத்யாதிகள் விஜ்ஞாபனம் செய்திருந்தோம். உண்மையில் அவர் பரமாஸ்திகரா கையாலே அந்த பட்டர் ஸ்ரீஸூக்தியிலே அத்யந்த ப்ராவண்யங்கொண்டு, தாம் அவசரப்பட்டு எழுதின தற்கு மஹத்தான அநுதாபமுங் கொண்டு நமக்கு பதில் எழுதினர்—"ஸ்காலித்யே சாஸிதாரம்" என்ற முறையை தேவரீர் கைகொண்டு சிக்ஷித்ததற்கு மிகவும் க்ருதஜ்ஞனாகிறேன் இத்யாதி.

இது நிகழ்ந்து நாற்பது வருஷங்களுக்கு மேலாகிறது. நம்முடைய கடிதத்திற்குப் பிறகு அந்த மஹான் வேதாந்த தீபிகையில் என்ன எழுதினரென்பது நினைவில்லை. அதுநிற்க, இங்ஙனே பல ஐதிஹ் யங்கள் நம் பூர்வாசாரியர்களின் ச்லோக ரூபங்களான ஸ்ரீஸூக்திகளில் திகழ்கின்றன. அவற்றைப் பாரா மலே பலர் 'அந்த ஐதிஹ்யம் தவறு. இந்த ஐதிஹ்யம் புளுகு' என்றிப்படி ப்ரஸங்க மேடைகளிற் பேசப் புறப்பட்டு விடுகிறார்கள்.

முதலில் ஸ்வாமி ராமாநுஜர்க்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசர் பிறகு திருந்தி ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்தார் என்ற ஐதிஹ்யத்தைப் பிற மதத்தவர்கள் க்ஷேபிப்பது ஒருபுறமிருக்க; நம் மவர்களும் 'இது ஸம்பாவிதமா?" என்று சொல்ல வருகிறார்கள். யதிராஜ ஸப்ததியில் தேசிகன் "ஸ்வபலாத் உத்த்ருத யாதவப்ரகாசः" என்றருளிச் செய்திருப்பதை யெடுத்துக்காட்டின பிறகு அப் படியா?' என்கிறார்கள். ஸ்ரீ ராமாநுஜர் க்ருஹஸ்தராய் ஸ்ரீ காஞ்சியில் வாழ்ந்தபோது சாலக்கிணற்றி லிருந்து தேவப்பெருமாளுக்கு நித்தியப்படியாய் தீர்த்தம் கொணர்ந்து ஸமர்ப்பித்து வந்தாரென்று ஐதிஹ்ய முள்ளது. சதுச்சாஸ்த்ர வித்வானுயிருந்த ஸ்வாமி ஸாமாந்யர்களைப்போல் தலைமேல் தீர்த்தக் குடம் சுமந்து வந்தாரென்பது அவருடைய பெருமைக்குத் தகுமாவென்றும், இதெல்லாம் நவீநகாலத்து ஐதிஹ்ய மாயிருக்கு மென்றும் சிலர் கூசாமல் சொல்லத்துணிகிறார்கள். இவ்விஷயமும் யதிராஜ ஸப்ததியில் "தத்தம் யேந தயா ஸுதாம்புநிதிநா பீத்வா விசுத்தம் பயः காலே நः கரிசைலக்ருஷ்ண ஜலதः காங்க்ஷாதிகம் வர்ஷதி" என்கிற ச்லோகத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது காணும் என்றால் அப்படியா? என்கிறார்கள். இந்த ச்லோகத்தில், ஸ்வாமி ராமாநுஜர் தேவப்பெருமாளுக்குத் தீர்த்தம் ஸமர்ப்பித்தாரென்றிருக்கிறதே யொழிய தினப்படியாக ஸமர்ப்பித்து வந்தாரென்றில்லையே என்று சிலர் கேள்வி கேட்பதுண்டு. தினப்படி யாக வென்பதற்கு ஒரு ப்ரமாணம் காட்டினால் 'தாமே தலையில் சுமந்து வந்து ஸமர்ப்பித்தாரென்று இல்லையே' என்பர்கள்.

ஸ்ரீ காஞ்சீபுரியில் **திருவெஃகா** என்கிற திவ்யதேசம் ப்ரஸித்தமானது. இத்தலத்தெம்பெரு மானுக்கு **யதோக்தகாரி** யென்று திருநாமம். இத்திருநாமமே தமிழில் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என வழங்கி வருகின்றது. திருமழிசையாழ்வார் காலத்தில் அவருடைய திருவடியான கணி கண்ணனைப் பல்லவமன்னவன் கச்சியிலிருக்கக் கூடாதென்று வெருட்ட, அதனால் கணிகண்ணன் ஊரை விட்டுப் புறப்பட, அவனைப் பிரிந்திருக்க மாட்டாத ஆழ்வாரும் அவனைப் பின் தொடர, திருவெஃகாவி லெம்பெருமான் தானும் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொண்டு புறப்பட, கச்சிப்பதி முழுவதும் இருள் மூடிப் போக, இதன் காரணத்தை யறிந்த மன்னவன் பதறி யோடிச்சென்று பிழை பொறுத்தருளி மீளும்படி

ப்ரார்த்திக்க, பெருமாளும் ஆழ்வாரும் கணிகண்ணனும் மீண்டு வந்து சேர்ந்தார்களென்று ஐதிஹ்ய முள்ளது. அசல மூர்த்தியான அர்ச்சாவதாரப் பெருமான் எழுந்து போனுனென்பதும் திரும்பி வந்தா னென்பதும் பொருந்துமோவென்று ஸ்ரீ வைஷ்ணவர்களே கேள்வி கேட்க வருகிறுர்கள். வேதாந்த தேசி கன் பணித்த யதோக்தகாரி ஸ்தோத்ரத்தில் [வேகாஸேது ஸ்தோத்ரே] ஆருவது ச்லோகத்தில் இந்த ஐதிஹ்யம் வெகு சமத்காரமாக அநுஸந்திக்கப்பட்டுள்ளது. ★ப்ரத்யாதிசந்தி பவஸஞ்சரணம் ப்ரஜாநாம் பக்தாநுகந்துரிஹ, யஸ்ய கதாகதாநி ★ என்கிற ச்லோகம் ரஸவத்தரமானது. இதன் கருத்தாவது, யதோக்தகாரி யெம்பெருமான் பக்தனைப் பின் சென்று போவதும் வருவதுமான ஸஞ்சாரப்ரகாரத்தை யநுஸந்தித்தால் அஸ்மதாதிகளுக்கு ஸம்ஸார காந்தாரத்தில் நேரும் போவது வருவதான ஸஞ்சாரம் தொலையுமென்கை. அடுத்த ஏழாவது ச்லோகத்திலும் ★ ச்ரிதஜந பரதந்த்ரம் ★ என்பதனுல் இவ்வை திஹ்யம் ஸூசிதமாயிருக்கின்றது. ஸூசனையிருக்கட்டும். "பக்தானுகந்து: கதாகதாநி" என்று ஸுஸ்பஷ்டமாகவன்றோ வுள்ளது. மஹாமேதாவிகளான பூருவர்களுக்குத் தோன்ருத அநுபபத்தி களன்றோ இக்காலத்து விமர்சகர்களுக்குத் தோற்றுகின்றன. கண்ணழிவு சொல்லமுடியாத பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளினுலும் இவர்கள் தெளியவில்லை யென்ருல் இவர்களைப்பற்ற "ப்ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி" என்னவேணுமத்தனை. ... ... ★

11. ஆத்மஸ்துதிகூடுமா?

ஒவ்வொருவர்க்கும் நைச்சியாநுஸந்தானமென்பது ஸ்வருபாநுருபமெனப்படுகிறது. அதாவது, தம்மிடத்தில் உண்மையாக எவ்வளவோ ஏற்றங்களிருந்தாலும் அவையிருப்பதாகவே நினையாமல் பல வகைத் தாழ்வுகளே தம்மிடமுள்ளதாக அநுஸந்திப்பதே நைச்சியாநுஸந்தானமெனப்படுகிறது. இதுதான் ஸ்வருபத்திற்கு ஏற்றதாகவும் சொல்லப்படுகின்றது. இதற்கு எதிராக ஆத்மப்ரசம்ஸை செய்து கொள்வது தவறென்றும் தெரிவிக்கப்படுகிறது நூல்களில், ஆத்ம ப்ரசம்ஸையாவது ஆத்மஸ்துதி; இதுவே தற்புகழ்ச்சி யெனப்படும். இது மிகவும் தாழ்வான செயலென்று நிந்திக்கப்படுகின்றது. ஸ்வருப ஜ்ஞானம் தலைசிறந்து விளங்கப்பெற்ற மஹான்கள் ஒருபோதும் ஆத்மப்ரசம்ஸை செய்துகொள்ளமாட் டார்கள். நன்னூலில் பொதுப்பாயிரத்தில் ஒரு சூத்திரம்; (அதாவது)

"தோன்ரு தோன்றித் துறைபல முடிப்பினும்
தான் தற்புகழ்தல் தகுதியன்றே" என்பதாம்.

இதன் பொருளாவது, பிறர்க்குத் தோன்ருத நுட்பமான பொருள்களை வெளியிட்டுப் பல துறைகள் அமையப் பெரிய நூலைச்செய்து முடித்தானும் [மிகப்பெரிய வித்வானுக இருந்தாலு மென்றபடி,] தானே தன்னைப் புகழ்ந்து கொள்வது தக்கதன்றென்கை. இங்ஙனம் தற்சிறப்புக் கூடாதென்பது வித்வான் களுக்கு மட்டுமல்ல; சூரர்களாயிருந்தாலும் தனிகர்களாயிருந்தாலும், மற்றும் குலம் ருபம் முதலிய வற்ருல் மேம்பட்டவர்களாயிருந்தாலும் யாருக்குமே தற்சிறப்புக் கூடாதென்பதே நூற்கொள்கை.

ஸ்ரீ ராமாயணத்திற் சிறிது செல்வோம். திருவடியானவர் எல்லாவகைப் பெருமைகளும் பெற்றவ ரென்பதில் ஐயமில்லை. இவர் பிராட்டி பக்கலில் வார்த்தையாடும்போது ★ மத்த: ப்ரத்யவர: கச்சிந் நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ ★ என்கிறுர். 'ஸுக்ரீவ மஹாராஜரிடத்தில் என்னிலும் கடைகெட்ட வேறொரு வானரம் இல்லை' என்பது இதன் பொருள். இதற்கு முன்னே ★ மத்விசிஷ்டாச் ச துல்யாச் ச ஸந்தி தத்ர வநௌகஸ:★ என்றும் சொல்லுகிறுர். என்னைக்காட்டிலும் மேற்பட்டவர்களும் என்னே டொத்த நீசர்களுமான வானரர்கள் ஸுக்ரீவ ஸந்நிதானத்திலுள்ளார்களென்றபடி.

இங்கு இப்படித் தமது தாழ்வைக் கூறின திருவடிதாமே கடலைக் கடக்க வேண்டிய ஸந்தர்ப்பம் வந்தவளவில் [கிஷ்கிந்தாகாண்ட முடிவில்] ★ பந்நகாசநமாகாசே பதந்தம் பக்ஷிஸேவிதே. வைநதேய மஹம் சக்த: பரிகந்தும் ஸஹஸ்ரச:★ என்றார்; ஆகாசத்திலே கனவேகமாகப் பறந்து செல்கின்ற பக்ஷி ராஜனையும் அவலீலையாக இறுகப்பிடிக்கவல்லேன் நான்—என்று தற்புகழ்ச்சியாகச் சொல்லிக் கொள்வது இந்த ச்லோகத்தில் ஸ்பஷ்டமாகவுள்ளது. ஒருவரே ஒருகால் தம்மைத்தாழ்த்திக் கூறிக்கொள்வதும், மற்றொருகால் உயர்த்திக் கூறிக்கொள்வதுமானால் இதில் அர்த்தமில்லையே, ஸ்வரூபாநுரூபமான அநுஸந்தானமென்பது எப்போதும் மாறுபடாமலிருக்கவேண்டுமன்றோ; என்று சிலர் சங்கிக்கக் கூடும். இதைப் பற்றித் தெளிவு பிறப்பிப்பதற்கு முன்னே, இங்ஙனம் ஒருகால் நைச்சியாநுஸந்தானமும், மற்றொருகால் உத்கர்ஷ முரைத்தலும் கொண்டுள்ள வேறு சில மஹான்களையும் எடுத்துக் காட்டிப் பிறகு எல்லாவற்றுக் கும் ஒருங்கே ஸமாதான முரைப்போம்.

ஆழ்வார்கள் நைச்சியானுஸந்தானமே வடிவெடுத்தவர்களென்பது அனைவருமறிந்ததே. இதற்கு நாம் விசேஷித்துப் பாசுரங்களை யெடுத்துக்காட்டவேண்டியது அவசியமில்லை. இத்தகைய ஆழ்வார்களில் திருமழிசைப்பிரான் ★ பாலில் கிடந்ததுவும் பண்டரங்க மேயதுவும் ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்?—ஞாலத்தொரு பொருளை வானவர்தம் மெய்ப்பொருளை, அப்பிலரு பொருளை யானறிந்தவாறு★ என்றருளிச் செய்கிறார்: எம்பெருமான்படியை யான் தெரிந்து கொண்டிருப்பதுபோல வேறு யார் தெரிந்து கொண்டி ருக்கிறார் என்று, செருக்குத் தோற்றச்சொல்லப்பட்டது இதில். ★ என்மதிக்கு விண்ணெல்லா முண்டோவிலை ★ என்றும் இவ்வாழ்வார்தாமே பேசியுள்ளார். இனி, ★ நீசனேன் நிறையொன்று மிலேன் ★ சீலமில்லாச் சிறியன் ★ என்றிங்ஙனே தாழ்வின் எல்லையிலே நின்று பேசின நம்மாழ்வாரும் (திருவாய்மொழி ஆரும்பத்தில்) ★ குரவையாய்ச்சியரோடு கோத்ததும் ★ என்ற வொரு பதிகத்தில் பாட்டுத்தோறும் ஈற்றடியில் தம்முடைய உயர்வே பொலியப் பேசியுள்ளார்; ★ எனக்கார் பிறர் நாயகரே ★ ★ எனக்கினியார் நிகர் நீணிலத்தே ★ நாவுடையேற்கு மாறுளதோ விம்மண்ணின் மிசையே ★ என்றிப்படி பேசியிருப்பனகள் "இவை நம்மாழ்வாருடைய அருளிச்செயலா?" என்று வியக்கும்படியுள்ளன

ஆசாரியர்களில் ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளைக் காண்போம். ★ **ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யத் ந மயாவ்யதாயி.**★ என்றும், ★ **அமர்யாத: க்ஷுத்ரச் சலமதிர ஸூயாப்ரஸவ பூ: க்ருதக்னோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபர:, ந்ருசம்ஸ: பாபிஷ்ட:**★ என்றும் இவருடைய நைச்சியா நுஸந்தானங்கள் அப்ரமேயமானவை. இவர்தாமே ★ **ஆசைலாத் அத்ரிகந்யா சரணகிஸலய ந்யாஸதந்யோபகண்டாத் ஆரக்ஷோநீததஸீதா முககமலஸமுல்லாஸ ஹேதோச் ச ஸேதோ:. ஆ ச ப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதர யுகளாத் ஸூர்ய சந்த்ராவதம்ஸாத் மீமாம்ஸா சாஸ்த்ர யுக்மச்ரம விமலமநா: ம்ருக்யதாம் மாத்ரு சோங்ய:**★ **ந வயம் கவயஸ் து கேவலம் ந வயம் கேவல தந்த்ர பாரகா:, அபி து ப்ரதிவாதி வாரண ப்ரகடாடோபவிபாடநக்ஷமா:** ★ என்று பணித்துள்ள ச்லோகங்கள் தற்புகழ்ச்சியே வடிவெடுத்திருக்கக் காணுகின்றோம். இவற்றுக்கெல்லாம் இனி ஸமாதானம் கேண்மின்.

மேலேயெடுத்துக் காட்டின ஆளவந்தாருடைய செருக்குமொழிகள் வித்யார்த்தி தசையில் வெளி வந்தவை, ப்ரதிபக்ஷிகோஷ்டியில் வெளிவந்தவை. கீழே நாமெடுத்துக் காட்டிய நன்னூற்சூத்திரத்தில் "தான் தற்புகழ்தல் தகுதியன்றே" என்றவர்தாமே அடுத்த சூத்திர மியற்றிருப்பது கேளீர்;—

"மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கிலும் மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதிலும் தன்னை மறுதலை பழித்த காலையும் தன்னுடையாற்ற லுணராரிடையினும் தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே."

என்பதாமது. அரசனைக்காணச் செல்லுகிற வித்வான் தன்னுடைய பாண்டித்தியத்தை உள்ள படி தெரிவிக்கலாம்; ஒரு ஸபையில் வாதம் செய்து வெற்றி பெற வேண்டிய சந்தர்ப்பத்தில் "என்னுடைய பாண்டியத்தை என்னவென்று நினைத்தீர்கள்? பாருங்கள்" என்று செருக்கிச் சொல்லலாம்; தன்னை [உண்மையான வித்வானை] மற்றொருவர் ஞானக்குறைகூறிப் பழித்த ஸமயத்திலும்

தன்னுடைய யோக்யதையைத் தானே புகழ்ந்து கூறலாம்; தன்னுடைய ஞானப் பெருமையை உள்ளபடி தெரிந்துகொள்ளாதவர்கள் ' உமக்கு எந்தெந்த சாஸ்த்ரங்கள் போரும்?' என்று கேட்டால், அப்போதும் தனது கல்விப் பெருமையைப் பகரலாம்—என்பது இச்சூத்திரத்தின் பொருள். முடிவில் '**புலவோர்க்கே**' என்றதனால் உள்ளபடி புலமை பெற்றவர்க்கே இந்தத் தற்புகழ்ச்சி தகுமென்றதாயிற்று. இதன்படி ஆள வந்தாருடைய தற்புகழ்ச்சி சாலத் தகுமென்று தெரிந்துகொள்வது.

இனி, திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் போல்வாருடைய தற்புகழ்ச்சி—பகவத் குணாநுபவத்தின் பெருமையினாலுண்டான களிப்பின் மிகுதியினாலாயது. இது தற்புகழ்ச்சி யென்று நினைக்கத்தக்கதே யன்று. மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் "குரவை முதலாங்கண்ணன் கோலச் செயல்கள். இரவு பகலென்னுமலென்றும் பரவுமனம் பெற்றேனென்றே களித்துப் பேசும் பராங்குசன்" என்று மருமத்தை விளக்கியருளிச் செய்திருப்பது காண்க.

திருவடியின் தற்புகழ்ச்சியுரை எவ்விடத்திலுள்ளதென்று பார்க்கவேணும். கடற்கரையிலே வந்து சேர்ந்த வானர வீரர்கள் கடலைக்கடந்து செல்லவும், சென்று திரும்பி வரவும் முடியாமையை நினைத்துத் தளர்ந்திருந்த போது அவர்களின் தளர்ச்சி தொலையவும் உத்ஸாஹம் ஓங்கவும் பேசின பேச்சு அது. இங்ஙனம் திருவடி பேசியிராவிடில் வானரவீரர்கள் அங்கு முடிந்தேயிருப்பர்கள். அங்ஙனமாகாமைக்காக நிகழ்ந்ததான இத்தற்புகழ்ச்சி தண்ணீர்ப்பந்தல் வைத்த தருமத்தோடொக்குமென்பர். ஆக உதாஹரித்த ஆத்ம ப்ரசம்ஸைகளினால் ஸ்வரூபாநுரூபமான நைச்யாநுஸந்தானத்திற்குக் குறை இறையுமில்லை யென் றுணர்க. ... ☆

12. நப்பின்னையைப்பற்றின தெளிவு

ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் நப்பின்னைப் பிராட்டியின் ப்ரஸ்தாவம் பல பல விடங்களிற் காணப்படுகிறது. நப்பின்னையென்று சிலவிடங்களிலும் பின்னையென்று பலவிடங்களிலும் உள்ளது. ☆ பின்னை மணாளனை ☆ பின்னை தோள் மணந்த பேராயா ☆ பின்னைக்காய் ஏற்றுயிரையட்டான் ☆ நப் பின்னை காணில் சிரிக்கும் ☆ நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய் ☆ என்று பின்னை யென்றும் நப்பின்னை யென்றும் திருநாமத்தைச் சொல்லியிருப்பது தவிர, இங்ஙனே திருநாமஞ் சொல்லாமல் ☆ கோவை வாயாள் பொருட்டு ஏற்றினெருத்த மிறுத்தாய் ☆ ☆ வம்பவிழ்கோதை பொருட்டா மால் விடையேழுமடர்த்த ☆ அன்றுருமேழுந் தழுவி நீ கொண்ட ஆய்மகளன்பனே ☆ என்று பொதுப்படச் சொல்லியிருக்குமிடங்களும் பல பல.

யசோதைப்பிராட்டிக்கு உடன் பிறந்தவனாய்க் கும்பனென்னும் பெயரையுடையவொரு கோபாலன் திருவாய்ப்பாடியிலிருந்தான்; அவனுக்கு மகளாய்த் தோன்றினவள் இந்த நப்பின்னை. ஜனக சக்ரவர்த்தி தன் மகளான ஸீதா பிராட்டிக்குக் கந்யாசுல்கமாக வில் முறியை வைத்திருந்ததுபோல, இந்தக் கும்பன் தன் மகளான நப்பின்னைக்கு ஏறு தழுவுதல் என்னுங் காரியத்தைக் கந்யாசுல்கமாக வைத்திருந்தனன்; அதாவது ஒருவராலும் வலியடக்க முடியாத ஏழு எருதுகளை முன்னிறுத்தி இவற்றை வலியடக்குபவர்க்கே தன் மகளை மணம் புரிவித்துத் தருவதென்று ஒரு வ்யவஸ்தை செய்து வைத்திருந்தனன். அவளுடைய ரூபலாவண்யாதிசயங்களைக் கேள்வியுற்ற பலரும் அவளை மணந்துகொள்ள விரும்பி அவ்வெருதுகளை 'யடர்ப்பதாக வர, அவற்றின் இடி போன்ற முழக்கத்தினால் அவர்கள் யாவரும் வெகு தூரத்திற்கு அப் புறத்திலேயே தள்ளுண்டு போயினரென்றும், கண்ணபிரானொருவனே அவற்றை அவலீலையாக வலியடக்கி அவளை மணந்து கொண்டனனென்றும் வரலாறு கூறப்படுகின்றது.

க்ருஷ்ணவதாரத்தில் ருக்மிணீ ஸத்யபாமைகளையே ப்ரதாநமஹிஷிகளாக நூல்களில் சொல்லி யிருப்பது தவிர, அர்ச்சையிலும் அநுபவித்து வருகிறோம். ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களில் ருக்மிணிப் பிராட்டியைப் பற்றின ப்ரஸ்தாவம் அதிஸ்வல்பமாகவே யுள்ளது. திருவாய்மொழியில் ☆ அன்றங்கமர் வென்று உருப்பிணி நங்கை யணி நெடுந்தோள் புணர்ந்தான் ☆ என்றும், பெரியாழ்வார்

திருமொழியில் ★ உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக்கொண்டு ★ உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் தொடர்ந்தோடிச் சென்ற ..... ★ என்றும். நாச்சியார் திருமொழியில் ★ கண்ணாலங் கோடித்துக் கன்னி தன்னைக் கைப்பிடிப்பான் திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து, அண்ணாந்திருக்கவே ஆங்கு அவளைக் கைப்பிடித்த பெண்ணாளன் ★ என்றும் இங்ஙனே சிலவிடங்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிரா நின்றது. நப்பின்னைப்பிராட்டியின் ப்ரஸ்தாவத்திற்கே அபரிமிதமான ஸாபேக்ஷ முள்ளது. இராமாநுச நூற்றந்தாதி யிலுங்கூட ★ நங்கள் பஞ்சித் திருவடிப் பின்னை தன் காதலன் ★ என்று நப்பின்னைப் பிராட்டியை யிட்டே எம்பெருமானை விசேஷித்திருப்பது காணநின்றோம்.

இவளுக்கு வடமொழியில் என்ன பெயரென்று தெரிந்துகொள்ள வேணுமே. கூரத்தாழ்வான்; பட்டர், தேசிகன் ஆகிய மூவருடைய திருவாக்குக்களில் மட்டுமே நப்பின்னையின் ப்ரஸ்தாவம் வந்திருக் கின்றது. இம் மூவரும் இவளை **நீளா** என்றே குறிப்பிட்டருளியுள்ளார்கள். இதைப்பற்றி மேலே விவரிப் போம். அது நிற்க.

ஸ்ரீ க்ருஷ்ண பகவத் கதைகளை நாம் தெரிந்துகொள்வதற்குப் பரம ப்ரமாணமாக விளங்குகின்ற ஸ்ரீ விஷ்ணுபுராணம் ஸ்ரீ பாகவதம் மஹாபாரதம் முதலிய இதிஹாஸ புராணங்களில் ஒன்றிலும் இந்த நப்பின்னைப் பிராட்டியைப்பற்றின இதிஹாஸம் காணப்படவில்லை. சிலர் **நாக்நஜிதீ** என்பவளுடைய சரித்திரத்தைக் கண்டு இவளைத்தான் ஆழ்வார்கள் நப்பின்னைப் பிராட்டியாகக் கூறியிருக்கிறார்களென்று மருள்வதுண்டு; இப்படிச் சிலர் எழுதியுமிருக்கிறார்கள். அவளுடைய சரிதையில் ஏறுதழுவுதல் என்பது உள்ளதாதலால் அதைக்கொண்டு ப்ரமிக்கின்றார்கள். அவள் க்ஷத்ரிய குமாரியாகச் சொல்லப்பட்டிருப் பதைக் குறிக்கொள்ளவேண்டும். கண்ணன் திருவாய்ப்பாடியில் வாழ்கிற காலத்தில் மணந்துகொண்ட தாகக் கதையிருக்கவேண்டும்; அவள் கோபால கன்னிகையாகவுமிருக்கவேண்டும். நாக்நஜிதீ என் பவளுக்கு இவ்விரண்டு அம்சங்களும் அஸம்பாவிதமாகையாலே அவளை நப்பின்னையாகக் கொள்வதற்குச் சிறிதும் ஔசித்யமில்லை. நப்பின்னையை ஆய்மகளென்றே ஸ்பஷ்டமாகக் குறிக்கின்றார்கள் ஆழ்வார்கள். " ஆயர்மடமகள் பின்னைக்காகி அடல்விடையேழினையும், வீயப்பொருது வியர்த்து நின்றானை மெய்ம்மையே கண்டாருளர் " என்கிறார் பெரியாழ்வார். அன்றுரு மேழுந் தழுவி நீகொண்ட ஆய்மகளன்பனே " என்கிறார் நம்மாழ்வார், இங்ஙனமே பாசுரங்கள் பல பலவுள்ளன. ஆகவே நாக்நஜிதியை நெஞ்சால் நினைக்கவும் ப்ரஸக்தியில்லையாயிற்று.

ஆகில் இவளையும் இவளுடைய சரித்திரத்தையும் ஆழ்வார்களும் ஆண்டாளும் எங்ஙனே தெரிந்து கொண்டார்களென்று கேள்வி பிறக்கும். வேதாந்தவாசிரியர் யாதவாப்யுதய காவியத்தில் திருவாய்ப் பாடியில் நிகழ்ச்சிகளைச் சொல்லிவருமடைவில் நான்காவது ஸர்க்கத்தில் (98, 99 ஆகிய இரண்டு சுலோ கங்களினால்) கண்ணபிரான் நப்பின்னைப் பிராட்டியை மணந்துகொண்ட வரலாற்றைப் பணித்துள்ளார். அந்த சுலோகங்களாவன:—

திசாகஜாநாமிவ சாக்வராணாம் ச்ருங்காக்ரநிர்ப்பிந்ந சிலோச்சயாநாம்,
ஸ தாத்ருசா பாஹுபலேந கண்டான் நிபீட்ய லேபே பணிதேந நீலாம்.
கரேண தம்போலிகடோரதுங்கான் தேஹாந் ப்ருதூன் தாநவதுர்வ்ருஷாணாம்,
விம்ருத்ய நூநம் விததே முகுந்த: ப்ரியாஸ்தநஸ்பர்சவிஹாரயோக்யம்.

இவ்விரண்டு ச்லோகங்களுள் முந்தின சுலோகத்தினால்—நப்பின்னைப் பிராட்டியின் திருமணத் திற்காக எருதுகளை வலியடக்க வேண்டுவது சுல்கமாக வைக்கப்பட்டிருந்ததென்றும் அப்படியே அவ் வெருதுகளை வலியடக்கி அவளைக் கண்ணபிரான் மணந்துகொண்டானென்றும். நீளாவென்பது அவளுடைய பெயர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிந்தின சுலோகத்தினால்—இவ்வேறு தழுவுதல் கண்ணபிரானுக்கு நப்பின்னைப்பிராட்டியின் திருமுலைத் தடத்தோடு அணைந்தாப்போலவே யிருந்ததென்று சொல்லும் முகத்தால் இவ்வரிய பெரிய காரியம் வெகு அவலீலையாக நடைபெற்றதென்று காட்டப் பட்டுள்ளது. இவ்விடத்து வியாக்கியானத்தில் அப்பய தீக்ஷிதர் இக்கதையைச் சிறிது விரிவாக எழுதி இக்கதை ஹரிவம்சத்திலுள்ளதாகவும் எழுதியுள்ளார்.

ஆனால் ஹரிவம்சத்தில் நாம் தேடிப்பார்த்ததில் கிடைக்கவில்லை. அதிக ப்ரசாரத்திலுள்ள ஸ்ரீராமாயணுதிகளிலேயே எத்தனையோ விபர்யாஸங்கள் நேர்ந்திருக்கக் காணுகின்றோம். ஹரி வம்சத்திலும் இப்படி நேர்ந்திருக்கிறதென்று நாம் நினைக்க வேண்டியதாகிறது. தீக்ஷிதர் ஹரிவம்சத்தில் தாம் பாராமல் எழுதியிருக்கமாட்டார். அது எப்படியாவது இருக்கட்டும். மூலத்தில் தேசிகன் இக்கதையை வ்யக்தமாக வருளிச் செய்திருப்பதைக் காணுகின்றோம். இதிஹாஸ புராணங்களில் ஏதேனுமொன்றை ஆதாரமாகக் கொள்ளாமல் ஸ்வதந்திரமாக அவர் அருளிச் செய்யமாட்டார். தேநுகாஸுரவதம், காளியமர்த்தனம் முதலிய சரித்திரங்களுக்கு முன்பே இது நடைபெற்றதாகவும் திருவாய்ப்பாடியில் நிகழ்ந்ததாகவும் தேசிகன் காட்டியிருப்பதைக் காணுமிடத்து இது புராண ப்ரஸித்தமான கதையே யென்று நாம் கொள்ளக் குறையில்லை.

இப்பிராட்டியினுடைய திருநாமம் **நீலா** என்பதேயென்று மேலே குறித்த யாதவாப்யுதய ஸ்ரீஸூக்தியினுல் தெரிவதுபோலவே பட்டர் ஸ்ரீஸூக்தியினுலும் ஆழ்வான் ஸ்ரீஸூக்தியினுலும் நன்கு தெரிய வருகின்றது. திருப்பாவைக்குத் தனியனுக பட்டர் அருளிச் செய்த ச்லோகம் ☆ நீளாதுங்க ஸ்தநகிரிதடீஸுப்தம் ☆ இத்யாதி. இந்த ச்லோகத்தின் முதற்பாதமானது ☆ குத்துவிளக்கெரிய பாசுரத்தில் ☆ நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா! ☆ என்றதை மொழிபெயர்த்தபடியாகவுள்ளது. இதில் நப்பின்னையையே **நீளா** என்று நிர்தேசித்திருக்கிறுரென்பது ஸ்பஷ்டம். கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் க்ருஷ்ணுவதார ஸ்துதிபரமாக வருளிச்செய்த ச்லோகங்களுள் முதல் ச்லோகமாகிய ☆ ஹே ஸுந்தரைகதர ஜந்மநி க்ருஷ்ணபாவே ☆ என்னும் ச்லோகத்தில் ☆ நீளா குலேந ஸ்த்ருதீ கில ருக்மிணீ ச ☆ என்பது நான்காவது பாதம். இங்கு **நீளா** என்றது நப்பின்னைப் பிராட்டியையே யென்பது ஸ்பஷ்டம். திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்திலருளிச் செய்த ☆ ஆயனுகியாயர் மங்கை வேய தோள் விரும்பினுய் ☆ என்ற பாசுரத்தையே யடியொற்றி மேலே குறித்த ஸுந்தரபாஹுஸ்தவ ச்லோகம் அவதரித்ததாதலால் ஆயர்மங்கையாகிய நப்பின்னைப்பிராட்டியையே ஆழ்வான் **நீளா** என்று குறிப்பிட்டாரென்பது நிஸ்ஸந்தேஹம்.

ஆழ்வார்கள் ஓரிடத்திலும் நப்பின்னையை **நீலா** என்கிற பெயரால் நிர்தேசித்திருக்கவில்லை. அப்படி இருக்க இவ்வாசாரியர்கள் நீளா என்றருளிச் செய்திருப்பதற்குக் காரணம் யாது? என்று ஆராய வேண்டியதாகிறது. யாதவாப்யுதய வியாக்கியான கர்த்தாவான அப்பய தீக்ஷிதர் இந்த நப்பின்னையின் வரலாற்றை வடமொழிப் புராணத்தில் கண்டதாக நாம் கீழே காட்டியிருக்கிறோமல்லவா? அந்தப் புராணத்தில் **நீளா** என்கிற பெயர் இருந்திருக்கவேண்டும். இது நாம் ஊஹமாக எழுதுகிறபடி. நம்முடைய அந்தரங்கமான அபிப்பிராயம் கேளீர் :—

எம்பெருமான் திருநாட்டில் ஸ்ரீ தேவி பூதேவி நீளாதேவி யென்று மூன்று திவ்யமஹிஷிகளோடு கூடியிருப்பதாக பகவச்சாஸ்த்ரங்களினுல் தெரியவருகின்றது. ஸ்ரீ ராமாயணத்தில் ஸமுத்ர சரணுகதி ப்ரகரணத்திலுள்ளதான ☆ புஜை: பரமநாரீணும் அபிம்ருஷ்டமநேகதா ☆ என்ற ச்லோகத்தின் கோவிந்தராஜீய வியாக்யானத்திலும் இது காணலாகிறது. கூரத்தாழ்வானும் ஸ்ரீ வைகுண்டஸ்தவத்தில் (ச்லோ. 78 முதல்) ஐந்து ச்லோகங்களினுல் அம்மூன்று திவ்ய மஹிஷிகளையும் ப்ரசம்ஸிக்கிறுர். ஆழ்வார்களும் அந்த திவ்ய மஹிஷிகள் மூவரையும் சேர்த்துப் பேசுமிடங்களில் ☆ உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள் என்றிவர் மூவர் ☆ என்றும் ☆ கூந்தல் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை ☆ என்றும் ☆ குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும் ☆ என்றும் இவ்வண்ணமாகவே பேசியிருக்கக் காண்கிறோம். பகவச் சாஸ்த்ரங்களில் ப்ரஸித்தையான நீளா தேவியை ஆழ்வார்கள் ☆ ஆயர்மட மகளென்றும் ☆ குலவாயர் கொழுந்தென்றும் ☆ குழற் கோவலர் மடப்பாவை யென்றுமே கூறியிருத்தலால் ஆழ்வார்களின் திருவுள்ளத்தாலே ஆயர்மங்கையருள் ஒருத்தியான நப்பின்னைப் பிராட்டியே நீளாதேவியின் ஸ்தானத்தில் கொள்ளப்பட்டாளென்பது நிஸ்ஸந்தேஹமாகத் தேறி நின்றது. இல்லையாகில், திருநாட்டிலுள்ள திவ்ய மஹிஷிகளைப் பரிகணனை பண்ணுமிடங்களில் 'ஆயர் மடமகள்' என்னுஞ்சொல்லைப் பிரயோகித்தது பொருந்ாதன்றே.

ஆக ஆழ்வார்களின் திருவுள்ளத்தினால் நப்பின்னைப் பிராட்டியானவள் நீளாதேவியாகக் கொள்ளப்பட்டாளென்பது தேறிநின்றமையால் இதையடியொற்றியே நம் ஆசார்யர்கள் அவளை [நப்பின்னையை] வடமொழியினால் நிர்தேசிக்க வேண்டுமிடங்களில் **நீளா** என்று நிர்தேசித்தார்கள் என்று அறுதியிடலாகிறது.

தமிழர்களில் '**நக்கீரர்**' என்றொருவர் மிக்க புகழ் பெற்றவர். அவர்க்குக் கீரரென்பதே இயற்பெயரென்றும், உயர்வு குறிப்பதோர் உபஸர்க்கமாகிய 'ந' என்னுமெழுத்தைச் சேர்த்து உபசாரமாக நக்கீரரென வழங்குகிறார்களென்றும் கூறுகின்றனர் பெரியோர்; பின்னை—நப்பின்னை என்னுமிவ்விடத்திலும் அவ்வண்ணமாகவே கொள்ளத்தகும். ஸ்ரீ தேவிக்கும் பூதேவிக்கும் பிற்பட்டவளென்னுங் காரணத்தினால் பின்னையென்று ஆழ்வார்களால் வழங்கப்பட்டனள். .... ★

" ஆனைக்கும் அடிசறுக்கும் "

நம்மாழ்வார் திருவாய்மொழியில் ★ஒன்றுந் தேவு முலகு முயிருமென்று தொடங்கும் பதிகத்தில் (4-10-6)★ போற்றி மற்றோர் தெய்வமென்னும் பாசுரத்தில் ★எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே★ என்றருளிச் செய்துள்ளார். இப்பதிகத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்துவத்தை உபபாதித்து வந்த ஆழ்வாரை நோக்கி 'ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரனாகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணாமல் இதர தெய்வங்களைத் தொழுமாறு எங்களைச் செய்து வைத்தது ஏன் ?' என்று சிலர் கேட்பதாகக்கொண்டு அவர்களுக்கு விடை கூறுவதாக இப் பாசுரமமைக்கப்பட்டுள்ளது. இப்பாசுரத்தில் "எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே" என்பதுதான் உயிராகவுள்ளது. எல்லாரும் ஸ்ரீமந்நாராயணனையே தொழப்பெற்றால் எல்லாருமே வீடு பெறுவார்கள்; அப்படி எல்லாரும் வீடுபெற்று விட்டால் உலகு இல்லையாய் விடும்; (அதாவது லீலாவிபூதி அடியற்றுப் போய்விடும்) அங்ஙனம் ஆகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதர தேவதாபஜனம் பண்ணி ஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போம்படி செய்து வைத்தான்—என்பதாக இப்பாசுரத்திற்கு ஆபாத ப்ரதீதியில் பொருள் தோன்றக் கூடும். தசோபநிஷத் பாஷ்யகாரரான ரங்கராமாநுஜஸ்வாமி வடமொழியில் (திருவாய்மொழிக்குத்) தாம் பணித்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானத்தில் இவ்விதமான பொருளையே எழுதியுள்ளார். "பவாத்ருசாநாம். ஸர்வேஷாம் மோக்ஷலாபே லீலாவிபூத்யந்தர்ப்பூதலோகாநாம் உச்சேத. ஏவ ஸ்யாதிதி மத்வைவ ......" என்பவை அந்த ஸ்வாமியினுடைய வியாக்கியான பங்க்திகள்.

ஆனால், திருக்குருகைப்பிரான் பிள்ளான், நம்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் தம் வியாக்கியானங்களில் வெளியிட்டருளின பொருள் இங்ஙனேயல்ல. எங்ஙனமென்னில்; கேண்மின்; "**உலகில்லையென்றே**" என்றவிடத்தில், உலகு என்பதற்கு சாஸ்த்ர மென்று பொருள்; ப்ரபல பாபம் செய்து வைத்த நீங்களும் ப்ரபல ஸுக்ருதிகளுக்கே பெறக்கூடியதான மோக்ஷத்தைப் பெற்று விட்டீர்களாகில் சாஸ்த்ர மர்யாதையே அழிந்துவிடுமென்று நினைத்தே எம்பெருமான் உங்களை தேவதாந்தர ப்ரவணர்களாக ஆக்கிவைத்திருக்கிறான்; அவரவர்கள் பண்ணின புண்ய பாப ரூப கருமங்களுக்குத் தக்கபடியே பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ர மர்யாதை ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் முற் பிறவிகளில் பிரபலமான தீவினைகளைச் செய்திருக்கிறபடியால் அவற்றின் பலனாக இப்பிறப்பில் க்ஷுத்ரதேவதா பஜநம் பண்ணும்படியாக உங்களை உபேக்ஷித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களையும் புண்யாத்மாக்களைப் போலே ஸ்ரீமந்நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணி விடுவாரானால் அப்போது முன்சொன்ன சாஸ்த்ர மரியாதை அழிந்துவிடுமன்றோ; அங்ஙனம் அழியாமைக்காகவே உங்களை இங்ஙனமே நிறுத்தி வைத்தது—என்பதாகவே ஆழ்வார் திருவுள்ளம்பற்றிய பொருள் என்று பூருவாசாரியர்கள் உபபாதித்தருளுகிறார்கள். வேதாந்ததேசிகனும் த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளியில் ★ தத்தத் கர்மாநுரூபம் பலவிதரணதः★ என்று இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினர். ஆகவே ஆழ்வார் திருவுள்ளத்தால்

உலகு என்பதற்கு சாஸ்த்ர மென்னும் பொருள் தேறிவிட்டபடியால் இதை யடியொற்றியே ஸ்வாமி பாஷ்ய காரர் [☆அதோஸ்மி லோகே வேதே ச☆] என்ற கீதாச்லோகத்தின் பாஷ்யத்தில் லோக சப்தத்தை சாஸ்த்ர பரமாக நயிப்பித்தருளினரென்று அறியக் கிடக்கிறது. இந்த கீதா ச்லோகத்தை அப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் எடுத்துக் காட்டியுமிருக் கிறார்கள்.

எம்பெருமானார்க்கு முன்னே ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ரமென்னும் பொருளில் ப்ரயோகம் செய்தருளினர். ஸ்தோத்ரரத்நத்தில் (23) ☆ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே☆ என்ற விடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளா நின்ற பெரியவாச்சான்பிள்ளை "ஆயிரமடங்கு என்னால் பண்ணப் படாதது யாதொரு நிந்திதகருமமுண்டு அதிபாதகமஹாபாதகாதிகள். அது சாஸ்த்ரத்திலுமில்லை!....... அநுஷ்டாதாக்கள் பக்கல் இல்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்தில் காணலாமிறே" என்று அருளிச் செய்திருக்கிறார். தேசிகனும் ஸ்தோத்ரபாஷ்யத்தில் அவ்விடத்தில், "லோக்யதே அநேநேதி லோகः ப்ரமாணம்,.......அத்ர சாஸ்த்ரரூபப்ரமாண விசேஷவிவக்ஷா." என்றருளிச் செய்தார். இவற்றால் ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ரபரமாகவே கொண்டாரென்று விளங்காநின்றது. இப்படி ஆளவந்தாரும் எம்பெருமானாரும் கொண்டது ஆழ்வாரருளிச்செயலை அடியொற்றியே யென்பது நிஸ்ஸந் தேஹம். இவற்றை நோக்காமலெழுதினர் ரங்கராமாநுஜஸ்வாமி.

2. மற்றொன்றுங் கேண்மின்:—திருவாய்மொழி மூன்றாம்பத்தில் ஐந்தாவது பதிகத்தில் ஐந்தாவது பாசுரம் ☆சாதுசனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு, ஆதியஞ்சோதி யுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த☆ இத்யாதி. இதில் "ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த" என்கிற இரண்டாமடிக்கு உண்மையான பொருளைப் பலர் க்ரஹிப்பதில்லை. 'தனக்கு அஸாதாரணமான திவ்ய ரூபத்தைப் பரம பதத்திலே வைத்து விட்டு வேறொரு ரூபத்தைப் பரிக்ரஹித்துக்கொண்டு இங்கே வந்து பிறந்த' என்றே பலர் பொருள் கொள்ள நினைப்பர்கள். மூலத்தின் ஸந்நிவேசம் இப்படி ப்ரமிக்கச் செய்கிறது. திருக் குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்த ஆறாயிரப்படி முதலான வியாக்கியானங்களில் உண்மையான பொருள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, "ஆச்ரித ஜநவிரோதி கம்ஸாத்யஸுர நிரஸநார்த் தமாக **ஸ்வாஸாதாரண** திவ்ய ரூப விசிஷ்டனாய்க்கொண்டு இந்த லோகத்திலே மநுஷ்யனாய் வந்து பிறந்த" என்று ஆறாயிரப்படி யருளிச் செயலுள்ளது. இதை யநுஸரித்தே மற்ற வியாக்கியானங்களு முள்ளன. "**ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி**" என்கிற பகவத் கீதைக்கு இதுதான் சேர்ந்த பொருள். இப்படி யிருக்க, இங்கு ரங்கராமாநுஜஸ்வாமி தமது ஒன்பதினாயிரப்படியில் இவ் விடத்திற்கு வியாக்கியானமாக எழுதியிருப்பதாவது— "**ஜகத்காரணம் ஸுந்தரம் ஜ்யோதிர்மய விக்ரஹம் பரமபதே ஸ்தாபயித்வா அஸ்மிந் லோகே அவதீர்ணம்.**" என்று "அங்கு வைத்து" என்பதற்கு—'பரமபதத்திலே வைத்து' என்று இவர் அர்த்தம் செய்து கொண்டார். இது தவறு. **அங்குவைத்து** என்கிற முழுச் சொல்லுக்கு "அங்கிருக்கிறபடியே கொண்டு" என்று பொருள்.

ரங்கராமாநுஜ ஸ்வாமியிடத்தில் நமக்கு விசேஷ ப்ரதிபத்தியுண்டு, அவர் பரமப்ராமாணிகர். ஆயினும் சிலவிடங்களில் இப்படி ஸ்காலித்யம் நேர்ந்துவிடுகிறது. அவருடைய ஒன்பதினாயிரப்படியில் இங்ஙனமே மற்றுஞ் சில ஸ்காலித்யங்களும் காட்டக்கூடியவை யுள்ளன. ... . ☆

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயதத்துவ விளக்கம்

(வினு-விடை)

வினு-நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவஸம்பிரதாயத்திற்கு நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களும் ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான ஆசாரியர்களும் பிரவர்த்தகர்கள் என்று பெரியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆழ்வார்கள் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களையருளிச் செய்தவர்களென்பதை யறிந்திருக்கிறேன். அப்பாசுரங்களையும் நான் கண்ட பாடம் செய்திருக்கிறேன். ஆசாரியர்களைப் பற்றி ஒன்றுமறியேன். அவர்களை பற்றி விளக்கம் தர முடியுமா? ஆழ்வார்களைப் பற்றியும் அபூர்வமான விஷயங்களைத் தெரிவிக்கலாகுமா?

விடை—ஏன் முடியாது? நன்கு தருகிறேன். முன்னம் ஆசாரியர்களைப் பற்றிக் கேளாய். ஸ்ரீமந்நாதமுனிகள் என்பவர் ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறுண்டுகட்கு முன்பு இருந்தவர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய ப்ரவர்த்தகர்களான ஆசாரியர்களில் இவரே முதல்வர். இவர்க்கு முன்பு ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் இல்லையென்று சொன்னதாகக் கொள்ளாதே. காலம் அனுதியாதலால் ஸம்பிரதாயமும் அனுதியே. ஆனுல் நாதமுனிகள் தொடங்கியே நாம் ஆசாரியர்களின் திருநாமங்களை அறியக்கூடியதாகவுள்ளது

வினு—முதல்வரென்னப்படுகிற நாதமுனிகள் நமது ஸ்ரீவைணவசம்பிரதாயத்திற்கு எவ்விதமான உபகாரத்தைச் செய்தார்? எதனுல் இவரை முதல்வரென்கிறோம்? இவர் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்கட்கு உரையிட்டருளினுரா? அல்லது வைணவக் கோட்பாடுகளை விளக்கிச் சுதந்திரமாக ஏதேனும் நூல்களிட்டிருக்கிறுரா? "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் தர்சநம் நஃ" என்று வேதாந்த தேசிகன் கூறியிருப்பதை நானும் கேட்டிருக்கிறேன். நம் தரிசனம் நாதமுனி முதலாகத் தோன்றிற்றென்றுல் அந்த முதன்மை எதனுலென்பது தெரியவேண்டாமா?

விடை—நாத முனிகளின் காலத்தில் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களில் எதுவும் பிரசாரத்தில் இருக்கவில்லை. நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய் மொழியாயிரத்தில் "ஆராவமுதே அடியேனுடலம்" என்று தொடங்கும் பதிகமொன்றை மட்டும் அந்த நாதமுனி ஒரு சமயத்தில் ஒருவர் வாயில் கேட்கப் பெற்றுர். அதில் கடைசி பாசுரத்தில் "குருகூர்ச்சடகோபன் குழலின் மலியச் சொன்னவோராயிரத்துளிப்பத்தும்" என்றிருந்ததனுல் இப்படி ஆயிரம் பாட்டுக்கள் உணடென்றும், அவை சடகோபர் அருளிச் செய்தவையென்றும், அவர் குருகூரில் (ஆழ்வார் திருநகரியில்) அவதரித்தவரென்றும் தெரிந்துகொண்டு உடனே அத்தலத்திற்குத்தாமெழுந்தருளி அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை விசாரிக்கையில் "திருவாய்மொழி யாயிரமுண்டென்றும், நாலாயிர திவ்வியப் பிரபந்த முண்டென்றும் கேள்வியேயொழிய அவற்றையறிவார் இங்கு யாருமிலர்" என்று அவர்கள் கூறிவிட்டார்கள்,

வினு—அப்படியானுல் இப்போது வழங்கி வரும் திவ்வியப் பிரபந்தங்கள் எவ்வாறு பிரசாரமடைந்தன? நாதமுனிகள் அதன் பிறகு என்ன செய்தார்?

விடை—நம்மாழ்வார்க்கு அந்தரங்க சிஷ்யராயிருந்த மதுரகவிகளின் பரம்பரையில் தோன்றியவொருவர் ஆழ்வார் திருநகரியிலிருந்தார்; அவர் நாதமுனிகளிடம் சொன்னதாவது, "எங்கள் கூடஸ்தரான மதுரகவிகள் நம்மாழ்வார் துதியாக அருளிச் செய்த ★கண்ணி நுண்சிறுத்தாம் பென்கிற பிரபந்தம் எமக்குத் தெரியும்; அதனை இங்குள்ள திருப்புளிய மரத்தின் கீழ் இருந்து கொண்டு நியமத்துடன் பன்னீராயிரம் முறை பாராயணம் செய்தால் அவர்களுக்கு இஷ்டசித்தி யுண்டாகுமென்று கேட்டிருக்கிறோம்" என்பதாக. பிறகு நாதமுனிகள் உடனே அப்பெரியாரிடம் அந்த கண்ணிநுண்சிறுத்தாம்பு பிரபந்தத்தை உபதேசமாகப் பெற்று அவர் சொன்னபடியே பாராயணம் செய்ய, திருவுள்ளமுகந்த நம்மாழ்வார் திருப்புளிய மரத்தின் கிளையிலே ஞான முத்திரையோடு காட்சி தந்து நாதமுனிகளுக்கு நாலாயிரப் பாசுரங்களையும் உபதேசித்தருளினர். நம்மாழ்வாருடைய வாழித் திருநாமமொன்றில் "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்றுள்ளது.

வி௵—நம்மாழ்வார் ஜீவதசையிலேயே நாதமுனிகளுக்கு நாலாயிர முரைத்ததாக இதற்கு அர்த்தம் சொல்ல முடியாதோ? நம்மாழ்வார் பரமபதத்திலிருந் தெழுந்தருளி உபதேசித்து மறைந்தா ரென்று கொள்வதற்குப் பிரபலப் பிரமாண முண்டா? இதைப் பற்றி வேதாந்த தேசிகன் ஏதேனும் பணித்திருப்ப துண்டோ?

விடை—இதைப்பற்றி தேசிகன் விசேஷமாகப் பணித்திருப்பதுண்டு. அவர் பணித்த முப்பத் திரண்டு ரஹஸ்யங்களில் ஸம்ப்ரதாயபரிசுத்தி என்பதிலும் குருபரம்பராஸார மென்பதிலும் ஸாதித்திருக் கிறார். குருபரம்பராஸாரத்திலுள்ள வாக்கியங்களைச் சொல்லுகிறேன் கேள்; "நாதமுனிகள் ந்யாய தத்வ மென்கிற சாஸ்த்ரமும் யோக ரஹஸ்யமும் அருளிச் செய்தார். இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாக வுண்டான பரம்பரையாலும் திருவாய் மொழி முகத்தாலும் யோகதசையிலே ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார்" என்பது குருபரம்பராஸார வாக்கியம்.

வி௵—தேவரீர் உதாஹரித்த வாக்கியத்தில் "...பரம்பரையாலும்... முகத்தாலும்" என்றதற்குச் சேர "யோகதசையில் ஸாக்ஷாத்காரத்தாலும்" என்றிருக்க வேண்டாமா? வாக்யத்தில் ஏதோ விபர்யாஸமிருக்கும்போல் தோன்றுகிறதே. பங்க்தி அப்படித்தானா?

விடை—விபர்யாஸ மொன்று மில்லை; அப்படித்தான் பங்க்தி. சப்தஸாதுத்வ விசாரத்தில் இப்போது இறங்காதே, பொருளை மட்டும் கொள்ளக் கடவாய் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் யோக தசையில் ஸாக்ஷாத்காரம் தந்து ஆசார்யரானார் என்று ஸாதித்திருப்பதை மட்டுங்கொண்டு த்ருப்திபெறக் கடவாய்.

வி௵—அப்படியே த்ருப்தி யடைகிறேன். "நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் யோக தசையில் ஸாக்ஷாத்க்ருதராய் ஆசாரயரானார்" என்றிவ்வளவே தேசிகன் பணித்திருந்தால் போதுமே. "மதுரகவிகள் முதலான பரம்பரையாலும் திருவாய்மொழிமுகத்தாலும்" என்ற இரண்டு ஹேதுக்கள் புரியவில்லையே. அதை விளக்கியருளிச் செய்யவேணும்.

விடை—அதைப்பற்றி வியாக்கியானங்களில் தெளிவு பெறுவாயாக. நம்மாழ்வார் நாதனுக்கு நாலாயிரமுரைத்தது விபவதசையிலேயே யானதாகக் கொள்ளக் கூடாதோ? என்று நீ கேட்டதற்கு நான் அப்படி கொள்ளலாகாதென்று பிரமாணம் காட்டினேன். ஆழ்வார் காலத்திற்கும் நாதமுனிகள் காலத் திற்கு மிடையே மிகவும் வியவதான முண்டென்று விளங்கிற்று.

வி௵—இக்காலத்து ஆராய்ச்சிக்காரர்கள் "ஆழ்வார்கள் காலநிலை" முதலான சுவடி களை வெளியிட்டு "கி.பி. .. நூற்றாண்டில் இந்த ஆழ்வார், A. D... நூற்றாண்டில் இந்த ஆழ்வார்" என்று வரைந்திருக்கின்றார்களே, அது பற்றித் தேவரீருடைய திருவுள்ள மென்ன?

விடை—அச்சுவடிகளெல்லாம் இருளும் மருளும் வடிவெடுத்தவை யென்றும், இவ்வாராய்ச்சி யிலிழிந்து எழுதினவர்களான நாலைந்து நபர்கள் ஒருவரை யொருவர் தாமே கண்டித்துக் கொண்டு முடிந்து போயிருக்கிறார்களென்றும் பலபல பிரமாணங்களைக் காட்டி உண்மை நிலைநாட்டப்பட்டிருக் கின்றது. அந்த விசாரத்தைத் தனிப்பட வைத்துக்கொள்வோம். ஆசாரியர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியவற்றை விட்டுக் காடு பாய வேண்டா.

வி௵—தேவரீர் ஸாதிப்பது மிகவும் பொருத்தமானதே. காலநிலையைப் பற்றியும் அதிகமான ஜிஜ்ஞாஸையுள்ளது. நாளைக்கோ மறுநாளோ அதைப் பற்றின சர்ச்சையை வைத்துக் கொள்வோம். நாதமுனிகள் நம்மாழ்வார் பக்கலில் திருவருள் பெற்றபின்பு என்ன செய்தாரென்பதைப் பற்றி ஸாதித்தருள வேணும். அன்றியும் நம்மாழ்வார்க்கும் நாதமுனிகளுக்குமுள்ள தொடர்பைப்பற்றி தேசிகன் ஸம்ப்ரதாய பரிசுத்தி யென்கிற முதல் ரஹஸ்யத்திலும் ஸாதித்திருப்பதாகச் சொல்லிற்றே! அதையுங் கேட்க விரும்புகிறேன்.

விடை—தேசிகன் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் ஸாதிப்பதாவது—" வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்ம நந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார். ✯ ப்ராப்யம் ஜ்ஞாநம் ப்ராஹ்மணாந் க்ஷத்ரியாத் வா வைச்யாத் சூத்ராத் வாபி நீசாத் அபீக்ஷ்ணம் ✯ இத்யாதி ப்ரமாண பலத்தாலே ✯ மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான் ✯ என்றது உபபந்நம். வேதாந்தார்த்தவைசத்ய ஹேதுவாகையாலே பாஷாந்தரம் உபஜீவ்யம் .... ப்ராதுர்ப்பாவ விசேஷத்தாலும் நாதமுனிகளுக்கு ஆழ்வார் ஆசார்யரானார். இவரை ப்ரபந்ந ஸந்தான கூடஸ்ததையாலே ஆளவந்தார் " ஆத்யஸ்ய நஃ குலபதேஃ " என்றருளிச் செய்தார் " இத்யாதி.

வினா—தேவரீர் ஸாதித்த ஸம்ப்ரதாய பரிசுத்தி வாக்கிய ராசியில் " இந்த யுகாரம்பத்திலே " என்று ஸ்பஷ்டமாயிருக்க நவீன ஆராய்ச்சிக்காரர்களின் கோலாஹலத்திற்கு அவகாசலேசமுமில்லையே. அது கிடக்க. சிலருடைய வாதமென்ன வென்றால், ஒவ்வொரு மதத்திலும் பக்தர்கள் தோன்றித் தங்கள் தங்கள் பாஷைகளிலே தோத்திர நூல்கள் இயற்றியுள்ளார்களென்றும், அப்படியே ஆழ்வார்களும் தோத்திர நூல்கள் இயற்றினார்களாதலால் இவர்களும் மற்றவர்களைப் போன்ற பக்தர்களேயென்றும், இவர்களுக்கு விசேஷப்படியான ஏற்றம் கூறுவது தகுதியற்றதென்றும் ஒருசாரார் சொல்லி வருகிறார்களே, இதைப்பற்றியும் ஸாதிக்க வேண்டுகிறேன்.

விடை—அப்படிச் சொல்லுவது வீணான அசூயையினால் மட்டுமேயாம். ரிஷிகளும் தங்கள் புராணங்களில் ஆழ்வார்கள் தென்னாட்டில் விஷ்ணு பக்தர்களாய் தாமிரபர்ணி, காவேரி, பாலாறு, வைகையாறு முதலான புண்ய நதிகளின் கரையிலே அவதரித்து தமிழ்மொழியில் நாராயணனைத் துதிக்கப்போகிறார்களென்று சுலோகங்களை இயற்றி வைத்திருக்கிறார்கள். பிரஸித்தமான ஸ்ரீ பாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தில் "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணாஃ, தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ, காவேரீச......" என்றிவை முதலான சுலோகங்கள் ஆசார்ய ஹ்ருதயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன; அவை தேசிகனாலும் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் உதாஹரிக்கப்பட்டுள்ளன.

வினா—மிகவும் மகிழ்கிறேன். இனி நாதமுனிகளின் மேற் செய்திகளை ஸாதிக்கவேணும்.

விடை—நாதமுனிகளுக்கு மருமகன்மார் இருவர்—கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வானென்று. இவ்விருவரும் குசலவர்கள்போல் இசை பாடுவதில் மிக வல்லவர்கள். நாலாயிரப் பாசுரங்களையும் நாதமுனிகள் இவ்விருவருக்கும் பாடம் பண்ணி வைத்து, இவர்களைக்கொண்டு செய்வித்த ப்ரவசனத்தினால் தென்னாடு முழுவதும் திவ்யப்பிரபந்த அத்யயனம் பரவலுற்றது. இவ்விருவரும் கையில் தாளங் கொண்டு தேவகானத்தில் திவ்யப்ரபந்தங்களை ஸேவிப்பவர்களாயிருந்தனர். இவர்களது ஸந்ததியைச் சேர்ந்தவர்களே திருவரங்கம் பெரியகோயிலில் அரையர்களென்று வழங்கப்பட்டு சிரோபூஷணத்துடனும் கைத்தாளத்துடனும் அருளிச் செயல்களை ஸேவித்து வருகிறார்கள்.

வினா—அரையர் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் தெரிந்துகொள்ளவும், இவர்கள் எந்தெந்த திவ்யதேசங்களில் தொண்டு புரிந்து வருகிறார்களென்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

விடை—அரையர் என்கிற சொல்லில் இடையின ரகரமுள்ளதாகச் சிலரும், வல்லின றகரமுள்ளதாகச் சிலரும் சொல்லுவார்கள். இடையின ரகரமாகில் அரசர் என்னுஞ்சொல் அரையர் என்றாயிற்றென்று கொண்டு புருஷச்ரேஷ்டர் என்று பொருள் கூறுவர். வல்லின றகரமாகில், அறைதல் சொல்லுதலாய் விண்ணப்பம் செய்வர்கள் என்றபடியாம். இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நம்பெருமாள் ஸன்னிதியிலும் நாச்சியார் திருமாளிகையி (ஸ்ரீவில்லிபுத்தூரி)லும் ஆழ்வார் திருநகரியிலும் விளங்குகிறார்கள். திருக்குறுங்குடியில் கைசிகத்வாதசியன்று மட்டும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து அரையர் எழுந்தருளிக் கைங்கரியம் நிர்வஹித்து வருகிறார்; நம்பாடுவான் சரிதை தோன்றினவிடம் திருக்குறுங்குடியாதலால்.